விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 347 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 15 திங்கட்கிழமை (01.12.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### நாட்டை உலுக்கிய பேரனர்த்தம்

# 334 பேர் உயிரிழப்பு

## 370 பேரைக் காணவில்லை

### அவலத்தில் 10 இலட்சத்துக்கும் அதிக மக்கள் பாதிப்பு



(கொழும்பு)

நாட்டில் நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக இது வரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 334 ஆக அதிகரித்துள்ள

15ஆம் பக்கம் பார்க்க

### கலா ஓயாவில் சிக்கிய

## பேருந்தில் பயணித்த யாழ்.இளைஞன் மாயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த பேருந்து கலா ஓயாப் பகுதியில் வெள்ளத்தில் சிக்கிய நிலையில் பேருந்தில் இருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞனைக் காணவில்லை என பெற்றோர் தேடி

15ஆம் பக்கம் பார்க்க

# நம் நாடு வரலாறு காணாத பேரழிவைச் சந்தித்துள்ளது

### நிவாரணப் பணிகளுக்கு 3 ஆயிரம் கோடி ஒதுக்கீடு
### ஜனாதிபதி அநுர உருக்கமான உரை



(கொழும்பு)

வரலாற்றில் நாம் மிகப்பெரிய பேரழிவுக்கு முகம் கொடுத்துள்ளோம். இயற்கைப் பேரழிவு நம் சிறிய தீவை உலுக்கியுள்ளது. முழு நாடும் நீரால் மூழ்கியுள்ளது. இந்த நேரத்தில் நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். இவ்வாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நாட்டு மக்களுக்கு நேற்று ஆற்றிய விசேட உரையில் தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

### மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த உலங்கு வானூர்தி விபத்து

## விமானி உயிரிழப்பு

(கொழும்பு)

அனர்த்த நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த உலங்கு வானூர்தியொன்று லுணுவிலவுக்கும் வென்னப்புவவுக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்று (30) விபத்துக்குள்ளானதில் விமானி உயிரிழந்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## யாழில் பேரிடர் மூவர் உயிரிழப்பு

### 46 ஆயிரத்து 638 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலவிவரும் சீரற்ற வானிலை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மூன்றாக அதிகரித்துள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## மக்களின் குறை கேட்க 3 வட்ஸ்அப் இலக்கங்கள்

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கடுமையான அனர்த்த நிலைமை காரணமாக, அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்துள்ள பொது மக்கள் தமது பிரச்சினைகள், தேவைகள் மற்றும் அவசரத் தகவல்களை இலகுவாக முன்வைக்கும் வகையில், மூன்று வட்ஸ்அப் தொலைபேசி இலக்கங்

15ஆம் பக்கம் பார்க்க

### முல்லையில் மீட்புப் பணியிலிருந்த

## கடற்படை வீரர்கள் ஐந்து பேர் மாயம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த 5 கடற்படைச்

15ஆம் பக்கம் பார்க்க

## கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர் உயிரிழப்பு

### பொன்னாலையில் சோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொன்னாலைப் பகுதியில் மீனவர் ஒருவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பொன்னாலையைச் சேர்ந்த 63 வயதுடைய குறித்த மீனவர் நேற்று

15ஆம் பக்கம் பார்க்க

### பல்கலைக்கழகங்களின்

## கல்வி நடவடிக்கைகள்

### 8ஆம் திகதிவரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் எதிர்வரும் 8ஆம் திகதி வரை கல்வி நடவடிக்கைகளை ஒத்திவைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதமரும், கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை

15ஆம் பக்கம் பார்க்க

## பட்டப்பகலில் இளைஞன் வெட்டிப் படுகொலை

### திருநெல்வேலியில் பயங்கரம்





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஆடிய பாதம் வீதியில் திருநெல்வேலி சந்தைக்கு அண்மை

15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசிய சேவைகளை முன்னெடுக்க புதிய நிர்வாகக் கட்டமைப்பு ஸ்தாபிப்பு

## ஜனாதிபதி அநுர பணிப்புரை



(கொழும்பு)

பேரிடரில் சிக்கியுள்ள மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய சேவைகளை முன்னெடுக்க அத்தியாவசிய சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில், "அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அலுவலகம்" ஒன்றை பிரதமர் அலுவலகத்தை மையமாகக் கொண்டதாக நிறுவுவதற்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பணிப்புரை வழங்கியுள்ளார்.

அதன் பிரகாரம் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு, கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு, வீடமைப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சு மற்றும் அவற்றின் கீழ் இயங்கும் நிறுவனங்களான தொடருந்து திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, மின்சார சபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் என்பனவும் முப்படைகளையும் பிரதிநிதித்துவப் படுத்தும் அதிகாரிகள் குழு இந்த மத்திய நிலையத்தில் கடமைகளுக்காக நியமிக்கப்படவுள்ளனர்.

அந்த நிறுவனங்களின் அனைத்து விடயங்களையும் ஒருங்கிணைத்து வசதிகளை வழங்கும் ஒரு கூட்டு செயற்பாட்டு மையமாக செயற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

அனர்த்த நிலைமை தணிந்தவுடன் மக்களின் இயல்பு வாழ்க்கையை கொண்டுவர எடுக்க வேண்டிய அவசர நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக நேற்று (30) காலை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கியதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ந-7)

மீட்புப் பணிக்கு வானிலை முட்டுக்கட்டை

# இரு மணிநேரம் போராடி மூவரை மீட்ட விமானப்படை



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் பல இடங்களில் சிக்கித் தவிப்பவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை விமானப்படை முன்னெடுத்து வருகின்றபோதும் சீரற்ற வானிலை காரணமாக மீட்புப் பணிகள் தாமதித்துள்ளதாக விமானப் படை தெரிவித்துள்ளது.

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் தொடர் முயற்சியின் பலனாக இலங்கை விமானப்படையின் உதவியுடன் நேற்று(30) ஞாயிற்றுக்கிழமை காலை குஞ்சுக்குளம் பகுதியில் வெள்ளத்தில் சிக்கியிருந்த கணவன், மனைவி மற்றும் 10 வயது சிறுவன் என மூவர் வானூர்தி மூலம் மீட்கப்பட்டனர்.

புயல் மற்றும் மல்வத்து ஓயா ஆற்று வெள்ளம் காரணமாக கடந்த 3 நாட்களாக குஞ்சுக்குளம் தேக்கம் அணைக்கட்டு அருகில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இந்த மூன்று பேரும் உயிர்காத்துக்கொள்ள வழியின்றி வெள்ளத்தில் சிக்கித் தவித்திருந்த நிலையில் இரண்டு மணி நேர போராட்டத்தின் பின்னர் அவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் மீட்கப்பட்டு வவுனியா ஜோசப் முகாமிற்கு கொண்டுசெல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து அம்புலன்ஸ் மூலம் வவுனியா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந-7,285)






கட்டுநாயக்கவில் சிக்குண்டிருந்த

# 400 இந்தியர்கள் தாயகம் திரும்பினர்

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இந்தியாவுக்குப் பயணிக்க முடியாமல் பல நாட்களாக கட்டுநாயக்க விமான நிலையத்தில் சிக்கி சுமார் 400 இந்தியர்கள், வெள்ள நிவாரண உதவிகளை ஏற்றி வந்த இரு இந்திய விமானங்கள் மூலம் பாதுகாப்பாக இந்தியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அந்த வகையில் சுமார் 150 இந்தியப் பயணிகள் நேற்று பிற்பகல் 02:30க்கு I.C-130 விமானம் மூலம் இந்தியாவின் புதுடெல்லிக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

மேலும் 250 இந்தியப் பயணிகள் மாலை 04:00 மணிக்கு I.L-76 விமானம் மூலம் இந்தியாவின் திருவனந்தபுரத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இலங்கையில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக விமானப் போக்குவரத்துகளுக்கு இடையூறு ஏற்பட்ட நிலையில் குறித்த இந்திய விமானப் பயணிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

# உணவக ஊழியர் காய்ச்சலால் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள உணவகம் ஒன்றில் பணியாற்றிய புங்குடுதீவு 10 வட்டாரத்தைச் சேர்ந்த ஊழியர் ஒருவர் காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளார்.

குறித்த நபருக்கு கடந்த 27 ஆம் திகதி வியாழக்கிழமை காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் மறுநாள் மயக்க முற்றுள்ளார்.

இதனையடுத்து அவரை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சாட்சிகளை பொலிஸார் நெறிப்படுத்தினர்.(ந-7,60)

# மூளையில் கிருமித் தொற்று குடும்பஸ்தர் மரணம்

மூளையில் கிருமித் தொற்று ஏற்பட்டதன் காரணமாக கிளிநொச்சி மருதநகரைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை உயிரிந்துள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான குறித்த குடும்பஸ்தர் கடந்த எட்டாம் திகதி காய்ச்சல் ஏற்பட்ட போதும் சிகிச்சை பெறாது வீட்டில் இருந்துள்ளார்.

இந்நிலையில் காய்ச்சல் கூடியதால் கடந்த 22 ஆம் திகதி கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை (29) உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை கிளிநொச்சி பொலிஸார் நெறிப்படுத்தினர்.

பிரேத பரிசோதனையில் மூளையில் கிருமித் தொற்று ஏற்பட்டு மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ந-7,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ள நீரில் விளையாடுவது உயிருக்கு ஆபத்தானது!

## சுகாதார மேம்பாட்டு பணியகம் எச்சரிக்கை

(கொழும்பு)

**நீர்நிலைகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் அவற்றை அண்மித்த பகுதிகளில் விளையாடுவதை தவிர்க்குமாறு கடுமையாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**



தற்போது, வெள்ளநீரில் விளையாடுபவர்கள் தொடர்பான காணொளிகள் சமூக வலைத்தளங்களில் அதிகரித்து வருகின்றன.

இது உயிராபத்தான செயல் என்பதால் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் எலிக்காய்ச்சல் பரவக்கூடிய அபாயம் காணப்படுவதாக சுகாதார மேம்பாட்டுப் பணியகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. எனவே, சுத்தமான நீரை பயன்படுத்துமாறு சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது. (8)

# கிளிநொச்சி மாவட்டத்தில் குடிநீர் விநியோகத்தில் நெருக்கடி

## நீரை சிக்கனமாகப் பயன்படுத்துங்கள்

### தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் சீரான நீர் விநியோக நடவடிக்கையினை மேற்கொள்வ தில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் நீரை சிக்கனமாகவும், கொதிக்க வைத்தும் பயன்படுத்துமாறு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் அறிவித்துள்ளனர்.

தற்போது ஏற்பட்ட கால அனர்த்தம் காரணமாக கிளிநொச்சி குளத்தின் நீர் என்றுமில்லாத அளவுக்கு மிகவும் அதிகரித்த கலங்கல் தன்மையுடன் காணப்படுவதனால் நீரை சுத்திகரித்து விநியோகிப்பதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

அத்தோடு, அவ்வப்போது ஏற்படுகின்ற மின்சார தடையும் நீர் விநியோகத்தில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இருப்பினும் இயன்றளவு நீரை சுத்திகரித்து வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனாலும் அவை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணப்படும்.'

எனவே பொது மக்கள் நீரை சிக்கனமாகவும், கொதிக்க வைத்தும் பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. (8-316)

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கலாபூஷணம் பரீட் இக்பால் எழுதிய முத்திரை பதித்த யாழ் முஸ்லிம்கள் எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 3.45 மணிக்கு வெள்ளவத்தை தமிழ்ச் சங்கத்தில் ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். எ.எம் முஹீதார் தலைமையில் நடைபெறவுள்ளது. (3)

# பலாலி பொலிஸ் நிலையத்துக்குள் புகுந்தது வெள்ள நீர்



(அராலி)

நாட்டில் நிலவிவரும் சீரற்ற காலநிலையால் பாதுகாப்பு படைகளின் முகாம்கள் மற்றும் அலுவலகங்களும் பாதிப்படைந்துள்ளன.

அந்தவகையில் யாழ்ப்பாணம் பலாலி பொலிஸ் நிலையத்திற்குள் வெள்ள நீர் புகுந்துள்ளது.

வெள்ள நீரை அகற்ற முடியாத நிலை காணப்படுவதுடன் தொடர்ச்சியாக மழையும் பெய்துவருவதால் பொலிஸாரின் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

யாழ். பலாலி பகுதியில் அதிகளவான இடத்தில் வெள்ள நீர் தேங்கி காணப்படுவதால் அப்பகுதியில் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது. (8-104)

# நிலவும் சீரற்ற காலநிலையால் கால்நடைகள் உயிரிழப்பு



(அராலி)

நாட்டில் நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக யாழ். வடமராட்சி கிழக்கு புன்னையடி பகுதியில் கால்நடைகள் இறந்த நிலையில் காணப்படுகின்றன.

இறந்து கிடக்கும் கால்நடைகளை அகற்றும் பணிகளை பருத்தித்துறை பிரதேச சபையினர் மேற்கொண்டு வருகின்றனர். கால்நடைகள் உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை. (8-104)


கலாநிதி அருட்கவி

சீ.விநாசித்தம்பி (MA, PHD) புலவரது

குருபூசைத்தினம்



கார்த்திகை-ரேவதி-ஏகாதசி

ஈனத்தி லேபிறந்து புவிமீதே
ஏதுக்க ளாகலைந்து திரிநாயேன்
தானத்தி லேசிறந்த பதயோகம்
சாதித்தே னாவியின்ப முறுவேனோ
வானத்தி லேபறந்து வருவோனே
வாரிக்கு வேதுயின்ற நெடுமாயா
ஞானத்த னேகுழந்தை வடிவோனே
நாகத்தி லாடிநின்ற பெருமானே

கலாநிதி அருட்கவி.சீ.விநாசித்தம்பி புலவர்

அன்னாரது குருபூசைத் தினமானது இன்று விசுவாவசு வருடம் கார்த்திகை மாதம் பதினைந்தாம் நாள் திங்கட்கிழமை (01.12.2025) அவரது சமாதியில் மு.ப 11.00 மணியளவில் பூசைகளுடன் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து மதியபோசன விருந்தும் அன்னசுரபி மண்டபத்தில் இடம்பெறும். அன்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாகேஸ்வரம்,
அளவெட்டி மேற்கு, அளவெட்டி (C-4455)


மகள்: திருமதி.தி.ஸ்ரீரங்கநாயகி
(குடும்பத்தினர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# முத்தரப்பு ரி-20 தொடரை கைப்பற்றியது பாகிஸ்தான்!

**பாகிஸ்தானில் இடம்பெற்ற முத்தரப்பு கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.**



இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதிய இறுதிப் போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 19.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 114 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணியின் சார்பில் கமில் மிஷார 59 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணியின் சார்பில் ஷஹீன் அஃப்ரிடி மற்றும் மொஹமட் நவாஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.


இந்தநிலையில் 115 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 18.4 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் பாபர் அஸாம் ஆட்டம் இழக்காமல் 37 ஓட்டங்களையும் சய்ம் அயூப் 36 ஓட்டங்களையும் சாஹிப்ஸதா பர்ஹான் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பவன் ரத்நாயக்க 2 விக்கெட்டுக்களையும் எஷான் மாலிங்க, வனிந்து ஹசரங்க ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதற்கமைய குறித்த ரி-20 முத்தரப்பு கிரிக்கெட் தொடரைப் பாகிஸ்தான் அணி கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

# ஐ.பி.எல் ஏலத்தில் இருந்து டு பிளெசிஸ் விலகல்!



2026ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். ஏலத்தில் தனது பெயரைப் பதிவு செய்யப்போவதில்லை என்று தென்னாபிரிக்காவின் முன்னாள் துடுப்பாட்ட வீரரான டு பிளெஸ்லிஸ் தனது சமூக ஊடகப் பதிவு மூலம் அறிவித்துள்ளார்.

கடந்த 14 வருடங்களாக ஐ.பி.எல். தொடரில் பெற்ற நட்புகள், நினைவுகள் மற்றும் ரசிகர்களின் ஆதரவுக்கு நன்றி தெரிவித்த அவர், இந்தியா தனது இதயத்தில் சிறப்பான இடத்தைப் பிடித்துள்ளது என்றும், எதிர்காலத்தில் திரும்புவதை நிராகரிக்கவில்லை என்றும் குறிப்பிட்டார். இருப்பினும், இந்த ஆண்டு அவர் ஒரு புதிய சவாலை ஏற்று, வரவிருக்கும் பாகிஸ்தான் சூப்பர் லீக் தொடரில் விளையாடத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும் ஒரு புதிய நாடு, புதிய சூழல் மற்றும் சவாலை எதிர்பார்த்துப் பாகிஸ்தான் விருந்தோம்பலை ஆவலுடன் எதிர்நோக்குவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் 154 போட்டிகளில் விளையாடியுள்ள டு பிளெஸ்ஸிஸ், வெளிநாட்டு வீரர்களில் நான்காவது அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையைப் பதிவு செய்துள்ளார்.

கடந்த ஆண்டு டெல்லி கெப்பிடல்ஸ் அணி பங்கேற்றிருந்த அவர் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

# ரோஹித் சர்மாவின் சாதனையை முறியடித்த ஆயுஷ் மாத்ரே

## 18 வயதில் சாதனை

ரோகித் சர்மாவின் சாதனையை இளவயதில் சதமடித்து ஆயுஷ் மாத்ரே முறியடித்துள்ளார்.

18 ஆவது சையத் முஷ்டாக் அலி கிண்ணம் கடந்த நவம்பர் 26 ஆம் திகதி ஆரம்பமாகி டிசம்பர் 18 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது.

இதில் நேற்று முன்தினம் லக்னோவில் நடைபெற்ற லீக் போட்டியில், மும்பை மற்றும் விதர்பா அணிகள் மோதியது.

நாணய சுழற்சியில் வென்ற மும்பை அணி முதலில் பந்து வீசை தேர்வு செய்தது.முதலில் துடுப்பாட்டம் ஆடிய விதர்பா அணி, 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்களை இழந்து 192 ஓட்டங்கள் எடுத்தது.

193 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய மும்பை அணி, 17.5 ஓவர்களில் 3 விக்கெட்களை மட்டுமே இழந்து 194 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.



அதிகபட்சமாக ஆயுஷ் மாத்ரே, 53 பந்துகளில் 8 பவுண்டரி, 8 சிக்ஸர்கள் உட்பட 110 ஓட்டங்கள் குவித்து அணியின் வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தார். மேலும், இந்த சதத்தின் மூலம் ரோஹித் சர்மாவின் சாதனை ஒன்றை ஆயுஷ் மாத்ரே முறியடித்துள்ளார்.

இந்த சதத்தின் மூலம், முதல் தர டெஸ்ட் லிஸ்ட் - ஏ ஒருநாள்போட்டி, ரி-20 ஆகிய 3 விதமான உள்ளூர் போட்டிகளிலும் சதமடித்த இளம் வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார். முன்னதாக ரோஹித் சர்மா 19 வருடம் 339 நாட்களில் இந்த சாதனையை படைத்திருந்தார். ஆயுஷ் மாத்ரே, 18 வருடம் 135 நாட்களில் இந்த சாதனையை படைத்துள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் வரும் டிசம்பர் 12 ஆம் திகதி தொடங்கவுள்ள யு-19 ஆசிய கிண்ணத்துக்கான இந்தியா அணியின் அணித் தலைவராக ஆயுஷ் மாத்ரே தேர்வு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசியமற்ற பயணங்களை தவிருங்கள்-இராணுவத்தளபதி

(கொழும்பு)

**நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக அத்தியாவசியமற்ற மற்றும் ஆபத்தான பயணங்களை தவிர்க்குமாறு இராணுவத் தளபதி லசந்த ரொட்ரிக்கோ பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், மோசமான காலநிலை காரணமாக பல இடங்களுக்கு பயணிப்பதை தவிர்க்கவும். உங்கள் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்திக்கொள்ளும்போது உங்களைக் காப்பாற்ற வரும் இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியோரின் உயிர்களுக்கும் ஆபத்து ஏற்படுகின்றன. எனவே அத்தியாவசிய பயணங்களை தவிர்க்குமாறு குறிப்பிட்டுள்ளார். (8)



# மெல்சிரிபுரவில் மண்சரிவு 3 மாதக்குழந்தை உயிரிழப்பு!

(கொழும்பு)

குருநாகல், மெல்சிரிபுர - கந்து மல்ல பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் 3 மாத குழந்தை உட்பட 5 பேர் உயிரிழந்துள்ளதோடு, 9 பேர் காணாமல் போயுள்ளனர்.



நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை வரை பல இடங்களில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக, மண்சரிவில் பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் நடவடிக்கை கடினமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (8)

# ஓராண்டு நிறைவு

தோற்றம் 25 . 07 . 1948

மறைவு 12 . 12 . 2024



## அமரர். சிவலிங்கம் தனேஸ்வரலிங்கம்

திதி : துவாதசி

பிறந்த இடமாக ஏழாலைப்பதியினிலே, சிவலிங்கம்-இராசம்மா தம்பதியினருக்கு இரண்டாவது மகவாக திகழ்ந்து, புகுந்த இடமாக சங்கானையில் நாகலிங்கம்-இராசமணி தம்பதியினரின் மகளான யோகராணி ஆகிய என்னைத் திருமணம் முடித்து, நாற்பது ஆண்டு கால வாழ்க்கையிலே திருமதி என்ற வெகுமதியை எனக்கு அளித்த ஆருயிரே! மும் மொழிகளிலும் ஆற்றலோடு முழு நிலவாய் காட்சி தந்த என்னுயிரே! செல்வாக்கும் சொல்வாக்கும் நிறைவாக தான் பெற்று பாசத்தின் உறைவிடமாய், பக்தியின் இருப்பிடமாய் வாழ்ந்து காட்டிய பெருந்தகையே! தங்கள் பாசம் நிறைந்த சகோதர, சகோதரிகள், பெறாமக்கள், மைத்துனர், உற்றார், உறவினரையும் துடிக்க விட்டு இதயக் குமுறலுடன் விண்ணுலகம் நாடி எம்மைக் கலங்க வைத்து இறைவனிடம் சரணடைந்த என் அன்புக் கணவரே! வலி நிறைந்த கண்ணீர்ப் பூக்களை நின் பாதக் கமலங்களில் காணிக்கையாக்குகிறேன்.

தேவாலய வீதி,
சங்கானை.

இதோ ஓராண்டும் நிறைந்ததுவே
இவ்வண்ணம் அன்பு மனைவி

(1740)

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 05 . 06 . 1947

மறைவு 28 . 11 . 2025



S.V முருகேசு எமது நிறுவனத்தில் 28 வருடங்களாக கணக்காய்வாளராக கடமையாற்றிய

அமரர்

## சபாரட்ணம் இராஜதுரை

அவர்கள் கடந்த 28.11.2025 வெள்ளிக்கிழமை அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*S.V.MURUGESU*
*154, Hospital Road, Jaffna*

*S.V.M (PVT) LTD*
*122, Dam Street, Colombo - 12*

(C-4457)

தகவல்:
உரிமையாளரும்
ஊழியர்களும்

# மரண அறிவித்தல்

## செல்வி.தேவராசா பிரமிளா



இலக்கம் 9, தேவஸ்தன் உடுவில் வீதி, மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி.தேவராசா பிரமிளா அவர்கள் கடந்த 29.11.2025 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தேவராசா தேவமணி தம்பதியினரின் ஏகபுத்திரி ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 01.12.2025 திங்கட்கிழமை காலை 10 மணியளவில் இல.19 திருப்பதி, மெமோறியல் வீதி எனும் முகவரியில் இடம்பெறும். பின் பிப்பிலி இந்து மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.19 திருப்பதி,
மெமோறியல் வீதி, மானிப்பாய். (6044)

தகவல் -
மருமகன் (ப.சிவகுமாரர்)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கடந்த 2024.12.11 அன்று
இறைவனடி சேர்ந்த எங்கள் அன்பு அம்மா

## அமரர்.திருமதி மகாலட்சுமி கணபதிப்பிள்ளை

(திதி:ஏகாதசி)



தோற்றம் 24.04.1940

மறைவு 11.12.2024

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலிப் பிரார்த்தனை இன்று 2025.12.01 திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் காமாட்சி திருமண மண்டபத்தில் (நாச்சிமார் கோவில்) நடைபெறும். இவ் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து சிறப்பித்து தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

13, அரசடி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் (1744)

தகவல் : குடும்பத்தினர்
076 985 4453 (மகள்-கிருபா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை புரட்டிப்போட்ட 'டித்வா' புயலின் கோரத்தாண்டவம்


நல்லூர்





நயினாதீவு




கிளிநொச்சி


இரணைமடு


மன்னார்






முல்லைத்தீவு





வவுனியா




வடமராட்சி




மன்னம்பிட்டி


கொழும்பு





(8-33-60-104-316-250-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவும் சீரற்ற காலநிலையால் சுற்றுலாப் பயணிகளுக்கு விசா நீடிப்பு

**(கொழும்பு) ........................................ இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக சிக்கல்களுக்கு உள்ளான சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கை அரசாங்கம் விசேட ஆதரவுத்திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.**

இந்த காலகட்டத்தில் அவர்களின் விசா காலாவதியான சுற்றுலாப் பயணிகளுக்கு எவ்வித அபராதமும் இன்றி இலவச விசா நீட்டிப்பு வழங்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், விமான சேவைகள் ரத்து கட்டணங்கள் மற்றும் திகதி திருத்தக் கட்டணங்களுக்கு விலக்கு அளிக்க ஒப்புக்கொண்டுள்ளன. பயணத் திட்டங்களை மாற்ற வேண்டியவர்களுக்கு மிகுந்த நெகிழ்வான மறுபதிவு வசதி வழங்கப்படும்.

இந்த சலுகைகளைப் பெற வானிலை காரணமாக பாதிக்கப்பட்டதைக் குறிப்பிடும் சுய அறிக்கை போதுமானது எனவும் கூறப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையில் தங்கியிருக்கும் சுற்றுலாப்பயணிகள் பாதுகாப்பாக இருந்து, அதிகாரப்பூர்வ அறிவிப்புகளை பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

உதவிகள் தேவையானவர்கள் 1912 என்ற இலக்கத்தை தொடர்பு கொள்ளலாம். (8)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுங்கள்

## தவிசாளர் நிரோஸ் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் பெய்துவரும் கடும் மழை காரணமாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை எல்லைக்குள் அதிக வெள்ளப் பாதிப்புக்கள் இடம்பெற்றுள்ள நிலையில் அப் பகுதி மக்களுக்கு உடனடி உணவு உதவிகள் தேவையாகவுள்ளன என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.



எமது பிரதேசம் ஒவ்வொரு கிராமங்களின் ஐம்பது சதவீதமான பகுதிகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. அரசாங்கம் முகாம்களுக்குச் செல்வோருக்கே உடனடி உதவி என்ற சுற்று நிரூபத்தினை வெளியிட்டிருந்தது. அதன் வாயிலாக கடும் வெள்ளப்பாதிப்புக்களை எதிர்கொண்டு வீடுகளுக்குள் முடக்கப்பட்டுள்ள மக்கள் உணவுக்குத் திண்டாடும் நிலை உள்ளது. பிரதேசத்தில் ஏற்கனவே பலருக்கும் ஒருவகை வைரஸ் காய்ச்சல் உள்ள நிலையில்

முதியவர்கள், சிறுவர்கள், நோயாளிகள் எனப் பலரும் உடனடி உணவிற்கே திண்டாடுகிறார்கள். இந் நிலையில் உடனடி உதவிகளை வழங்கக்கூடியவர்கள் வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை நல்க முன் வரவேண்டும் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார். (க-8)

# அனர்த்தத்தால் பாதிக்கப்படும் சிறுவர்கள் 1929 இற்கு அழையுங்கள்

(கொழும்பு)

அனர்த்த நிலையில் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான எந்தவொரு தகவலையும் உடனடியாக தெரிவித்துக் கொள்ள இரண்டு கட்டணமில்லா தொலைபேசி சேவைகள் தற்போது 24 மணிநேரமும் செயற்பட்டு வருவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சுடன் இணைந்துள்ள தேசிய மகளிர் சபையின் 1938 பெண்கள் உதவி அவசர தொலைபேசி இலக்கம் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 1929 சிறுவர் உதவி அவசர தொலைபேசி இலக்கங்கள் மூன்று மொழிகளில் இலவசமாக செயற்படுகின்றன.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு, நலன், அவ்சர உதவி மற்றும் தேவையான நடவடிக்கைகளை எடுக்க இவ்விரு ஹாட் லைன்களும் முக்கிய பங்கு வகிப்பதாக அமைச்சு தெரிவித்துள்ளது.எனவே தேவைப்படும் தருணங்களில் உடனடியாக தகவல் தெரிவித்து பாதுகாப்புக்கு ஒத்துழைக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (8)


## அறிவித்தல்
## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குநர்கள் மற்றும் நிர்மாணதாரர்களை பதிவு செய்தல் -2026

மேற்படி அறிவித்தல் தொடர்பாக **06.11.2025** ஆம் திகதிப் பத்திரிகையில் எம்மால் விளம்பரப்படுத்தப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் " விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதி 25.11.2025" என அறிவிக்கப்பட்டது. இவ் இறுதித் திகதியை **10.12.2025** வரை நீடித்துள்ளோம் என்பதையும் இதுவரை விண்ணப் பிக்காதவர்கள் இக் காலப் பகுதிக்குள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.

**கௌரவ செயலாளர்,**
**மதியாபரணம் அம்பிகைபாகன்**
**அறங்காவலர்சபை,**
**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்.**

**தொலைபேசி இலக்கம்**
**021 432 3440**

(C-4458)


# சோமவார விரதத்தில் திண்ணபுர சிவன் தரிசிப்போம் பிரார்த்திப்போம் கும்பாபிஷேகம் காண்போம்

**கொம்மை வரிமுலைக் கொம்பனையாள் கூறனுக்கு**
**செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேனுக்கு**
**இம்மை தரும் பயன் இத்தனையும் ஈங்கொழிக்குக்**
**அம்மை குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே**

*(மாணிக்கவாசகர் திருவாசகம்- 568)*

இன்று சோமவார விரதத்தில் வேண்டுவன ஆண்டவன் அறிந்தளிப்பான்.

இறைவனுக்கு அன்போடு கூடிய மனத்தினால் திருத்தொண்டுகள் செய்கின்றவன் நான். அத்தகைய எமக்கு இப் பிறவியில் உண்டாகக் கூடிய வினைப் பயன்கள் முழுவதையும் ஒழிக்க வல்ல **தாய் போன்று விளங்குகின்ற கூத்தனை அடியேன் பற்றிக் கொண்டேன்.**

பழைய ஊராகிய சிதம்பரத்தில் வீற்றிருக்கின்ற அப்பனாகிய நடராசப்பெருமானும், அம்மையாகிய சிவகாமித் தாயாரும் எழுந்தருளி வீற்றிருந்து அடியவர்களுக்கு அருள் செல்வத்தை வழங்குமாறு **சிவமுருகர் திருத்திண்ணபுரத்திற் கட்டுவித்த சிவன் கோயிலை எம்பெருமான் காரைநகர் மக்கள் ஒன்று சேர்ந்து திருப்பணிகளைச் செய்து அருள்மிகு கும்பாபிஷேகம் காண்போம்.** இன்றும் என்றும் அருள்மிகு பூரணைபுட்களை ஐயனாரையும், சௌந்த்ராம்பிகை, சுந்தரேசப் பெருமாளையும் ஈழத்துச் சிதம்பரம் கூத்தனையும் திருவாசகம் ஓதி பிரார்த்திப்போம்.

சிவ திருமுருகர் அவர்கள் திருவாசகம் ஓதியும், திருவாசகத்தை ஓலைச் சுவட்டில் எழுதி வைத்து, திருத்திண்ணபுரத்திற் கட்டிய சிவன் கோவிலையும், திருவாசகம் தந்த மாணிக்க வாசகர் நாமத்தில் உள்ள தொண்டுகளையும் பாதுகாத்து எம்பெருமானது திருவருள் மிகுதியாகப் பதிந்து **திருவாசகம் ஓதியும் வீடுபேற்றை பெற்று உய்வோமாக.**

இன்று கார்த்திகை 2026 இல் 3 ஆவது நாளில் வரும் சோமவார விரதம் சிவபெருமானைக் குறித்து அனுஷ்டிக்கும் விரதங்களில் அதி சிறந்த இந்த விரதத்தை அனுஷ்டித்தும் இன்றும், அன்றும் பேறடைந்தோர் பலர் தக்கன் சாபத்தால் சந்திரன் தேய்ந்துபோய் ஒரு கலையுடன்,பிரம்மா,விஷ்ணுவின் ஆலோசனையுடன் சிவமூர்த்தியை எண்ணி விரதம் இருந்து சோமன் என்ற பெயரையும் எம்பெருமானது **திருச்சடையினின்றும் நீங்காதிருக்கும் வாழ்வையும் பெற்ற நாள் சோமவாரம் ஆகும்.**

சித்தரவன்மன் மகளாகிய சீமந்தனி 14 ஆவது வயதில் மாங்கலமிழப்பாள் என நிமித்திகர் கூறக் கேட்ட தந்தை பெரிதும் வருந்தியதை அறிந்து, மைத்திரிதேவி அவளுக்கு சோமவார விரதம் கற்பித்தாள். சீமந்தனி அவ்வாறே முறைப்படி விரதமிருந்து, நிடத தேசத்தரசனாகிய சந்திராங்கதனை மணஞ்செய்து இனிது வாழ்ந்தனள்.

சீமந்தனி சோம வார விரத பலனை நினைவு கூறி பெரு மகிழ்ச்சி கொண்டு அவ் **விரத பலனை உலகம் அறிந்து உய்யுமாறு** பன்னெடுங் காலம் அந் நோன்பை நோற்று இனிது வாழ்ந்தும் எல்லாரது வாழ்க்கையும் நலம் பெற அருள் வழி அமைத்தார்.

அதி உன்னதமான சோமவார விரதம் இம்முறை 5 நாட்கள் வரும் நாட்களில் சிவ ஆலய தரிசனம் பெற்று **வேண்டுவார் வேண்டுவதை "ஈவான் சிவன்"** எல்லோரும் முறைப்படி அனுஷ்டித்து சகல நலன் களையும் பெறுவோம்.

நமது உறவினரையும் சிவ விரதப் பெருமையை அறிய வைத்தும், **நம்பிள்ளைகளைத் தினமும் காலை, மாலை சைவ ஆசாரத்துடன் திருமுறைகளை ஓதி,** பிள்ளைகளை நல் வழிப்படுத்துவோம்.

*சித்தர் இராமலிங்க சுவாமிகள்*

**சிற்சபையும் பொற்சபையுஞ் சொந்தமென தாச்சு**
**தேவர்களும் மூவர்களும் பேசுவதென் பேச்சு**
**இச் சமய வாழ்விலெனக் கென்னையின் பேச்சு**
**என்பிறப்புத் துன்பமெலா மின்றோடே போச்சு**

**அன்பே சிவம் க.கு.க.சிவபாலன் (k.k.k)**
**சிவநெறிப்புலவர், பாஞ்சசண்யம்.**
**01.12.2025**



(C-4456)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# அமெரிக்காவில் துப்பாக்கி சூடு

- 4 பேர் பலி
- 10 பேர் படுகாயம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் ஸ்டாக்டன் நகரில் லூசைல் அவென்யூ பகுதியில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் விருந்து நிகழ்ச்சி ஒன்று நடந்தது. இதில், குழந்தைகள், பெரியவர்கள் என பல்வேறு குடும்பத்தினரும் ஒன்றாக பங்கேற்றிருந்தனர். அப்போது, திடீரென துப்பாக்கி சூடு நடந்துள்ளது. இதனால், பயத்தில் அலறியபடி பலரும் தப்பித்து ஓடினர்.

எனினும், இந்த சம்பவத்தில் குழந்தைகள் உட்பட 4 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், 10 பேர் காயம் அடைந்துள்ளனர். இந்த தாக்குதலுக்கான காரணம் என்னவென்று உடனடியாக தெரிய வரவில்லை. ஆனால், இது திட்டமிட்ட தாக்குதலாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

சந்தேகத்திற்குரிய நபர்கள் யாரும் அடையாளம் காணப்படவோ அல்லது கைது செய்யப்படவோ இல்லை.

எப்.பி.ஐ.அதிகாரிகள், மதுபானம், புகையிலை, துப்பாக்கி மற்றும் வெடி பொருட்களுக்கான துறையை சேர்ந்தவர்கள் சம்பவ பகுதிக்கு சென்று ஆய்வில் ஈடுபட்டு வருகின்றனர்.

சமீபகாலமாக அமெரிக்காவில் அடிக்கடி துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் அரங்கேறி வருகிறது. சில தினங்களுக்கு முன்பு, வெள்ளை மாளிகை அருகே ஆப்கானிஸ்தானை சேர்ந்த 29 வயதான ரஹ்மானுல்லா லகன்வால் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் தேசிய காவல்படை வீரர் ஒருவர் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (3)

# கருங்கடலில் உக்

# நெருப்பு கோளம

# ரகசிய எண்ணெ

**கருங்கடல் ஊடாக பயணப்பட்ட ரஷ்யாவின் இரண்டு ரகசிய எண்ணெய் கப்பல்கள் மீது, நீரில் செல்லக்கூடிய ட்ரோன் எனப்படும் ஆளில்லா சிறிய விமானத்தை செலுத்தி உக்ரைன் தாக்குதல் நடத்திய சம்பவம் இடம்பெற்றுள்ளது.**

துருக்கியின் பாஸ்பரஸ் ஜலசந்திக்கு அருகே கருங்கடலில் ரஷ்யாவின் இரண்டு எண்ணெய் கப்பல்கள் திடீரென்று வெடித்து நெருப்பு கோளமான சம்பவம் வெளியாகியுள்ளது.

துருக்கிய அதிகாரிகள் மற்றும் வட்டாரங்கள் வெளியிட்டுள்ள தகவலில், கப்பலில் இருந்தவர்களை மீட்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

எகிப்திலிருந்து ரஷ்யாவுக்குச் செல்லும் வழியில் கருங்கடலில் 274 மீற்றர் நீளமுள்ள கைரோஸ் என்ற எண்ணெய் கப்பல் வெடித்து தீப்பிடித்துள்ளது.


இதனையடுத்து இரண்டு விரைவு மீட்புப் படகுகள், ஒரு இழுவைப் படகு மற்றும் ஒரு அவசரகால மீட்புக் கப்பல் உடனடியாக சம்பவ இடத்திற்கு அனுப்பப்பட்டதாக துருக்கியின் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

குறித்த கப்பலில் இருந்து 25 ஊழியர்கள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் நோவோரோசிஸ்க் துறை முகத்திற்கு சென்று கொண்டிருந்த போது, துருக்கிய கடற்கரையிலிருந்து 28 கடல் மைல் தொலைவில் கைரோஸ் கப்பல் திடீரென்று ஏற்பட்ட தாக்கம் காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாக துருக்கியின் கடல்சார் விவகார இயக்குநரகம் தெரிவித்துள்ளது.

இன்னொரு எண்ணெய்க்கப்பலான விராட், கருங்கடலில் சுமார் 35 கடல் மைல் தொலைவில் மோதியதாகக் கூறப்படுகிறது,

# நீண்டநாள் காதலியை கரம்பிடித்தார் ஆஸி.பிரதமர்



(சிட்னி)

அவுஸ்திரேலியா நாட்டின் பிரதமர் அந்தோனி அல்பானீஸ், அவரது நீண்டநாள் காதலி ஜோடி ஹெயிடனை திருமணம் செய்துகொண்டார்.

அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பானீஸிக்கும், அவரது நீண்டநாள் காதலி ஜோடி ஹெயிடனுக்கும் நேற்று முன்தினம் கான்பெரா நகரில் திருமணம் நடைபெற்றுள்ளது.

இதன்மூலம், பதவியேற்ற பிறகு திருமணம் செய்து கொண்ட முதல் அவுஸ்திரேலிய பிரதமர் எனும் பெருமையை அவர் அடைந்துள்ளார். இதனைத் தொடந்து, பிரதமர் அல்பானீஸ் ஹெயிடன் தம்பதிக்கு அவுஸ்திரேலியாவின் எதிர்க்கட்சித் தலைவர்கள், அமைச்சர்கள் மற்றும் முக்கிய பிரபலங்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

முன்னதாக, பிரதமர் அந்தோனி அல்பானீஸிக்கும், அந்நாட்டின் முன்னாள் அரசியல் தலைவர் கார்மல் டெபட் என்பவருக்கும் திருமணமாகி கடந்த 2019 ஆம் ஆண்டு இருவரும் விவாகரத்து பெற்றனர். இவர்களுக்கு ஒரு மகன் உள்ளதாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து, கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் பிரதமர் அல்பானீஸும், ஹெயிடனும் காதலித்து வந்த நிலையில், முக்கிய அரசியல் நிகழ்ச்சிகள் மற்றும் பிரசாரங்களில் இருவரும் ஒன்றாகப் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. (3)

# இந்தோனேஷியாவில் வெ

- 250 பேர் உயிரிழப்பு
- 100 இற்கும் மேற்பட்டோர் மாயம்



(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் கடந்த ஒரு வாரமாக தொடர்ச்சியாகப் பெய்து வரும் கன மழை காரணமாக வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை தற்போது 250 ஆக உயர்ந்துள்ளதாகவும் மேலும் உயிரிழப்புகளின் எண்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ரைன் கைவரிசை
# மான ரஷ்யாவின்
# ணய் கப்பல்கள்!



மேலும் மீட்புப் படைகளும் ஒரு வணிகக் கப்பலும் சம்பவ இடத்திற்கு அனுப்பப்பட்டதாக துருக்கியின் கடல்சார் விவகார இயக்குநரகம் தெரிவித்துள்ளது.

என்ஜின் அறையில் கடும் புகை இருப்பது கண்டறியப்பட்டது, ஆனால் அதில் இருந்த 20 பணியாளர்கள் நல்ல நிலையில் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலில் இந்த தாக்குதலை யார் நடத்தியது என்பது தெரியாமல் இருந்தது. இந்நிலையில், இந்த தாக்குதலுக்கு உக்ரைன் பொறுப்பேற்றுள்ளது.

ஏற்கனவே, இந்த கப்பல்களுக்கு பொருளாதார தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும், அது மீறப்பட்டதால், நீரில் செல்லக் கூடிய ட்ரோன் மூலம் தாக்கி அழித்ததாகவும், உக்ரைன் கூறியுள்ளது.

இதற்கு முன்பும், ரஷ்ய போர்க் கப்பல்கள் மீது, உக்ரைன் வெற்றிகரமாக கப்பல்களை மோதவிட்டு தாக்குதல் நடத்தியுள்ளது.(3)

# ரஷ்ய ஜனாதிபதி புடின் இந்தியா விஜயம்



(மொஸ்கோ)

ரஷ்ய ஜனாதிபதி புடின் 2 நாட்கள் பயணமாக டிசெம்பர் 4 ஆம் திகதி இந்தியா வர உள்ளார் என மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

டில்லியில் நடைபெறும் 23 ஆவது இந்தியா-ரஷ்யா வருடாந்திர உச்சிமா நாட்டில் பிரதமர் மோடியுடன் அவர் கலந்து கொள்ள உள்ளார்.

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "ரஷ்ய ஜனாதிபதி புடினின் அரசு முறை பயணம். இந்தியா ரஷ்யாவின் இருதரப்பு உறவுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்யவும்.

சிறப்பு மற்றும் சலுகை பெற்ற மூலோபாய கூட்டாண்மை குறித்த தொலைநோக்கு பார்வையை வலுப்படுத்தவும். பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் குறித்த கருத்துக்களை பரிமாறிக் கொள்ளவும் ஒரு வாய்ப்பை வழங்கும்" என்று தெரிவித்துள்ளது.

ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கியதற்காக இந்தியா மீது அமெரிக்கா கூடுதல் வரி விதித்துள்ள சூழலில் புடின் இந்தியா வருகிறார்.

இந்திய பயணத்தின் போது ரஷ்ய ஜனாதிபதி புடின் முக்கிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடைசியாக பிரதமர் மோடியும் ரஷ்ய ஜனாதிபதி புடினும் சீனாவில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் பங்கேற்றனர். (3)

# பெருவெள்ளம்

ம்



ணிக்கை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தோனேஷியாவில் கடந்த ஒரு வாரமாக தொடர்ச்சியாகப் பெய்து வரும் சுழற்புயல் காரணமாக வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் தற்போதுவரை முன்னெடுக்கப்பட்டு வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்நிலையில், வெள்ளம் மற்றும் மண்சரிவுகளில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 250 என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், மேலும் 100 இற்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளதாகவும் இந்தோனேஷியாவின் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (3)

# ஆப்கானிஸ்தானியருக்கான விசாவை நிறுத்தியது அமெரிக்கா!



(வோஷிங்டன்)

அமெரிக்க தேசிய காவல் படை வீரர்கள் மீது ஆப்கானை சேர்ந்தவர் துப்பாக்கிச் சூடு நடத்தியதை அடுத்து, ஆப்கானிஸ்தானியர்களுக்கான விசா வழங்கும் நடைமுறைகளை காலவரையின்றி நிறுத்தி வைக்க அமெரிக்க வெளியுறவுத்துறை உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்காவின் வெள்ளை மாளிகை அருகே, அந்நாட்டு தேசிய காவல் படையை சேர்ந்த இருவர் மீது, தெற்காசிய நாடான ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர் சமீபத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தினார்.

இதில், வீராங்கனை ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றொருவர் படுகாயமடைந்து உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இதை பயங்கரவாத செயல் என கூறியதுடன், இது முழு நாட்டிற்கான குற்றம் என குறிப்பிட்டிருந்தார்.

மேலும், மூன்றாம் உலக நாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு குடியேறுபவர்களுக்கு நிரந்தர தடை விதிக்க முடிவு செய்துள்ளதாகவும் ட்ரம்ப் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், அமெரிக்க குடியேற்றத்துறை அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதன்படி, ஆப்கானிஸ்தானியர்களின் குடியேற்ற விண்ணப்பங்கள் மற்றும் நடைமுறைகள் அனைத்தும் உடனடியாகவும், மறு ஆய்வு முடியும் வரை காலவரையின்றி நிறுத்தி வைப்பதாக தெரிவித்துள்ளது.

மேலும், கடந்த ஆட்சியில் ஜோ பைடன் நிர்வாகத்தின் போது அமெரிக்காவுக்கு வந்த ஒவ்வொரு வெளிநாட்டவர் குறித்தும் மறு ஆய்வு செய்ய அமெரிக்க ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளதாக கூறப்படுகிறது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தில் அடித்து செல்லப்படும் கால்நடைகள்

## கால்நடை வளர்ப்போர் கவலை

(மன்னார்)............................

**நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஆயிரக்கணக்கான கால்நடைகள் வெள்ளநீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக கால்நடை வளர்ப்பாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**



மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் மாவட்டத்தின் பல பகுதிகளில் ஆயிரக்கணக்கான கால் நடைகள் வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

நானாட்டான், மடு, மாந்தை மேற்கு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஆடு, மாடு உள்ளடங்கலாக ஆயிரக் கணக்கான கால்நடைகள் வெள்ளநீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

அவர்களினால் இயன்றளவிற்கு வெள்ளநீரில் அடித்துச் செல்லப்பட்ட கால் நடைகளை காப்பாற்றி படகில் ஏற்றி கரைக்கு கொண்டு வந்து காப்பாற்றி உள்ளனர்.

மேலும் மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளில் வெள்ளநீர் தேங்கி நிற்பதோடு பிரதான பாதைகளும் நீரில் மூழ்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-285)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 1000 | 800 | 800 | 600 |
| உருளைக்கிழங்கு | 300 | 220 | 180 | 300 |
| பச்சைமிளகாய் | 800 | 800 | 250 | 800 |
| தக்காளி | 1200 | 1500 | 800 | 1000 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 350 | 200 | 200 |
| கோவா | 400 | 380 | 200 | 800 |
| கரட் | 1000 | 900 | 300 | -- |
| பூசணி | 140 | 100 | 50 | 150 |
| புடோல் | 300 | 400 | 120 | 400 |
| வாழைக்காய் | 100 | 80 | 50 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 250-350 | 200 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 150 | 250 |
| பாகற்காய் | 1500 | 1300 | 850 | 1600 |
| வெண்டக்காய் | 400 | 300 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 300 | 200 | 300 |
| பயற்றங்காய் | 1500 | 1000 | 1200 | 600 |
| லீக்ஸ் | 1000 | 1200 | 250 | -- |
| பீற்றூட் | 400 | 400 | 120 | 600 |
| கறிமிளகாய் | 1300 | -- | 600 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | 400 | -- |
| போஞ்சி | 1200 | 1000 | 400 | 1000 |
| கத்தரிதம்புள்ள | 800 | 400 | 120 | 500 |
| கீரை – 1 பிடி | 150 | 160 | 80 | 200 |
| தேசிக்காய் | 1800 | 1200 | 600 | 1000 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 200 | 160 | 150-200 |
| இராசவள்ளி | 400 | 1200 | 500 | 800 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | -- |
| முள்ளங்கி | 200 | -- | 150 | 300 |
| பொன்னாங்காணி | 150 | 70 | 100 | 80 |
| வல்லாரை | 80 | 60 | 50 | 100 |
| சரப்பலா | 150 | 100-150 | 120 | 200 |

# இன்று ஒரு தகவல் 492



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இருக்கும் வரையில்...

ஓர் அலுவலகம். அதிலே ஒரு தலைமை அதிகாரி.

அவர் மிகவும் உண்மையானவர்... நேர்மையானவர். அலுவலகத்திலே உள்ள ஒவ்வொரு பொருளையும் மிகவும் பத்திரமாக பாதுகாத்து வந்தார்.

மேசை... நாற்காலி... குப்பைக் கூடை எல்லாம் அந்தந்த இடத்திலே இருக்கா என்று பார்த்துக் கொள்வார்.

நாற்காலியிலே ஒரு கால் உடைந்திருந்தாலும் அதை உடனே பழுதுபார்த்து சரி செய்துவிடுவார்.

அதாவது அவர் எப்படி என்றால் அந்த அலுவலகத்திலே உள்ள ஒவ்வொரு பொருளையும் தன்னுடையதாக நினைத்து பாதுகாத்து வந்தார்.

அந்த அதிகாரிக்கு ஒரு நாள் திடீர் என்று மாற்றல் உத்தரவு வந்தது Transfer Order.

உடனே என்ன செய்தார்? தன்னுடைய பெட்டி படுக்கையைக் கட்டிக் கொண்டு ஆயத்தமாகிறார்.

இப்ப அந்த அலுவலகத்திலே உள்ள மேசையைப் பற்றியோ, நாற்காலியைப் பற்றியோ அவர் கவலைப்படவில்லை.

அந்த அலுவலகத்திலே இருந்த வரைக்கும் அங்கே இருந்த எல்லா பொருட்களுக்கும் அவரே பொறுப்பு.

அதேவிதமாக... அவர் எல்லாத்தையும் தன்னுடையதாக பாவித்து அக்கறையா கவனித்தார்.

இதை "மாரகம்" அப்படி என்று சொல்கிறார்கள்.

அவரை அடுத்த ஊருக்கு மாற்றிய உடனே இது எல்லாம் தன்னுடையதில்லை... சமுதாயத்தைச் சேர்ந்தது... அப்படி என்னும் எண்ணம் வந்து விடும்.

தான் வெறும் "பொறுப்பாளி" மட்டுமே (Custodian) என்கிற எண்ணத்தோடு செயற்படுகிறார்.

இதுவும் "மாரகம்" தான்.

ஆனால் .."தாரகம்" என்பது வேறு.

அதே அலுவலர் மாற்றலாகிப் போகும்போது வீட்டிலே உள்ள எல்லாத்தையும் கட்டி லோரியிலே ஏற்றுகின்றார். பழைய செருப்பு , துடைப்பம் எதையும் விட்டு வைக்கவில்லை.! என்ன காரணம்?

எல்லாம் என்னுடையது என்னும் எண்ணம். ஆக..

எல்லாம் என்னுடையது என்னும் எண்ணம் தாரகம்.

என்னுடையதில்லை என்னும் எண்ணம் மாரகம்.

இந்தத் "தாரகம்", "மாரகம்" - இரண்டிற்கும் இடையிலே தான் மனித வாழ்க்கை ஊசலாடுகிறது என்பது பெரியவர்கள் (சாயி பாபா) கருத்து.

எல்லாவற்றையும் நாம் அனுபவிக்கலாம். ஆனா எதுவும் என்னுடையதில்லை என்னும் எண்ணம் எமக்கு வர வேண்டும்.

இருக்கிறதெல்லாம் இயற்கை கொடுத்திருக்கிற பிரசாதம்.

அரசாங்கம் கொடுத்திருந்ததை அந்த அதிகாரி காப்பாற்றினார். பொறுப்பிலே இருக்கிற வரைக்கும் இதையெல்லாம் காப்பாற்ற வேண்டியது தனது கடமை என்று நினைத்தார் அவர்.

அடுத்த ஊருக்குப் போ என்று சொன்னதும் அங்கே இருக்கிற எல்லாவற்றையும் உதறிவிட்டுக் கிளம்பிவிட்டார்.

இந்த உலகியல் கடமையை ஒரு யோகமாகச் செய்ய வேண்டும். இந்த உலகத்திலே இருக்கிறவரைக்கும்... என் வீடு... என் மனைவி... என் மக்கள்.. இது எல்லாமே இயற்கை அல்லது இறைவன் நமக்குக் கொடுத்திருக்கிற பிரசாதம் என்று உணர வேண்டும். அப்படிப் புரிந்து கொண்டு நம்முடைய கடமைகளைச் செய்ய வேண்டும்.

எல்லாம் என்னுடையது என்கிற "மமகாரம்"வந்து விடக் கூடாது.

ஒரு மனிதனுக்கு எது நிரந்தரம்?

எதுவரை இருக்கப் போகிறான்? யாருக்கும் தெரியாது. அதனாலே வாழும்வரை கடமையாற்றிக் கொண்டே காலம் கழிக்க வேண்டும். எல்லாம் இயற்கை தந்த வரப்பிரசாதம் என்கிற பாவனையோடு வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

இந்தக் காலத்து அதிகாரி ஒருத்தர். ஒரு லோரியிலே ஏறிக் கொண்டிருந்தார். "என்ன சார் விபரம்?" என்று கேட்டார் அவருடைய நண்பர் ஒருத்தர்.

"எல்லாம் என்னுடையது- என்று நினைத்தேன் அதோட விளைவு இது!" என்றார் அவர்.

"என்ன... அடுத்த ஊருக்கு மாத்திட்டாங்களா?" என்றார்

"இல்லை ?? ... என்னை அரெஸ்ட் பண்ணி அழைத்துக் கொண்டுப் போறாங்க!" அப்படி என்றார் இவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## புரத உணவுகளின் ஆரோக்கிய முக்கியத்துவம்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

புரத உணவுகளின் ஆரோக்கிய முக்கியத்துவம் உண்டு. அதிலும் நோய்க்கு பத்தியம், நோயாளிக்கு பத்தியம், மருந்திற்கு பத்தியமென உணவு முறைகளாலேயே நோயை கட்டுப்படுத்தும் சிகிச்சை முறைகள் தெளிவாக உள்ளன. அதிலும் பத்திய உணவுகளில் புரதச் சத்துள்ள உணவுகளுக்கு முக்கியத்துவம் கூடுதலாக கொடுக்கப்பட்டுள்ளன.

புரதங்களை எவ்வாறு அன்றாட உணவுகளில் மலிவாக எடுத்துக் கொள்வது. ஒரு நபருக்கு எவ்வளவு புரதம் தேவை என்பதில் புரதத்தின் முக்கியத்துவம் நிறையுள்ள மனிதனுக்கு 58-60 கிராம் புரதமாவது தினமும் தேவை. இது ஓரளவு அன்றாட உணவுகளில் கிடைக்கும். ஆனால் நாம் தெரிவு செய்யும் உணவுக் கூறுகளில் தங்கியுள்ளது.

நாம் மலிவாக, இலகுவாக கிடைக்கக் கூடிய புரதங்கள் எவை என்று பார்ப்போம். அத்துடன் புரத உணவுகளை எந்தளவிற்கு எடுக்கின்றோமோ அந்த அளவிற்கு இரத்தத்தின் சீனியின் அளவை கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும்.

எனவே இவ் புரத உணவுகள் நீரிழிவு நோயாளிகளுக்கும் அத்தியாவசியமானது. ஆனால் சாதாரணமாக 70 Kg நிறையுடைய ஒருவருக்கு 58 கிராம் புரதம் தினமும் தேவை. ஆனால் நாம் சாதாரணமாகவே பெரும் பாலானோர் 58 கிராம் இனைவிட குறைவான அளவு புரதத்தையே எடுத்துக் கொள்கின்றார்கள்.

ஆகவே நாம் என்னென்ன உணவுகளில் எவ்வளவு புரதம் இருக்கிறது. எவ்வாறு நாம் அதை இலகுவாக எடுத்துக் கொள்ளலாம் என்று நோக்கில், அத்துடன் சாதாரணமாக உங்கள் உணவில் புரதத்தை குறைவாக எடுத்துக் கொள்வதனால் தசைவலி, கை, கால் வலி, எளிதில் சோர்வடைதல், என்பு பாதிக்கப்படல், ஒஸ்ரியோபோரோஸிஸ் போன்ற எலும்புகள் பலவீனமடைதல், உடலின் எதிர்ப்பு சக்தி குறைவடைதல், போன்ற நிலைமைகள் ஏற்படுகின்றது.

நாம் இப்படியான பாதிப்பு ஏற்படும் போது விற்றமின் மாத்திரைகளை எடுக்கின்றோம். மாறாக புரதச்சத்து உள்ள உணவுக் குறைபாட்டினால் மேற்படி நிலைமைகள் ஏற்படும். என்பதை கருத்தில் கொள்வதில்லை. அதற்காக புரதத்தை அளவிற்கு அதிகமாகவும் எடுத்துக் கொள்ளக்கூடாது. ஆனால் பரிந்துரை செய்யப்பட்ட தேவையான அளவு புரதத்தை கட்டாயமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

குறிப்பாக வயதானவர்களுக்கு மிக மிக அவசியம். முட்டைக்கு ஈடாக சாதாரணமாக கிடைக்கும் நிலக்கடலையில்



புரதச்சத்து அதிகமாகக்கிடைக்கும். கிட்டத்தட்ட 100 கிராம் நிலக் கடலையில் 25 கிராம் அளவிற்கு புரதம் கிடைக்கும்.

ஆனால் நிலக்கடலையை சட்னியாகச் செய்து பயன்படுத்த வேண்டும். ஏனெனில் சட்னியில் பழப்புளி சேர்க்கும் போது நிலக்கடலையிலுள்ள புரதச்சத்து எமது உடலினால் இலகுவாக அகத்துறிஞ்சப்படுகிறது. நிலக்கடலையை சட்னியாகச் செய்து பயன்படுத்தும் போது Resven atrol எனும் சத்து கிடைக்கிறது. இதற்கு ஆன்ரி ஒக்ஸிடன்ட் தன்மை உண்டு. பொதுவாக அசைவ உணவான முட்டை, மீன், கோழி இறைச்சி போன்றன தரமான புரதத்தை தரவல்லன.

அதாவது அசைவ உணவிலுள்ள புரதம் ஜீரணசக்தி மற்றும் சத்துக்களை உறிஞ்சும் தன்மை அதிகமாகக் காணப்படும். எனவே சித்தமருத்துவத்தில் பத்திய உணவுகளில் மீன், வகைகளுக்கு முக்கிய இடமுண்டு. நிலக்கடலை சட்னியானது நீரிழிவு நோயாளிகளும் பயன்படுத்தலாம்.

ஏனெனில் சர்க்கரை உயர்த்தும் திறன் குறைவாகவே உள்ளது.

புரதத்தை பொறுத்தவரை அடுத்த முக்கியமான புரத உணவு பருப்புக் குடும்பம். எளிதில் ஜீரணமாகக் கூடிய பருப்பு பாசிப்பருப்பாகும். அதனால் தான் எமது மருத்துவத்தில் பாசிப் பருப்பு, துவரம் பருப்பிற்கு முக்கியத்துவம் அதிகமாகும்.

கிட்டத்தட்ட 100 கிராம் பாசிப்பருப்பில் 24 கிராம் புரதம் கிடைக்கும். அடுத்து முக்கியமான ஊட்டச் சத்து மன்னன் உழுந்து, அதனால் தான் கர்ப்பிணிப் பெண்கள், பூப்பெய்திய பெண்கள், பாலூட்டும் தாய்மாருக்கு கோதுடன் உழுந்து சிபாரிசு செய்யப்படுகிறது.

100 கிராம் உழுந்தில் 25 கிராம் புரதம் கிடைக்கும் உழுந்தை உழுத்தம் கஞ்சி, உழுந்து அடை போன்றன தயாரித்து பயன்படுத்தலாம். அடுத்து துவரம் பருப்பு, அதாவது 100 கிராம் துவரம் பருப்பில் 22 கிராம் புரதம் கிடைக்கும்.

அத்துடன் இரத்தத்தை விருத்தி செய்யும், நரம்புகளை பலப்படுத்தும் போலிக்கமிலம் எனும் சத்தும் துவரம் பருப்பில் அதிகளவில் கிடைக்கும். முக்கியமான புரத உணவு கொண்டக் கடலை கிட்டத்தட்ட 100 கிராம் கொண்டக்கடலையில் 19 கிராம் புரதம் கிடைக்கும். கொண்டக் கடலையில் நார்ச்சத்தும் சேர்ந்து கிடைக்கும். எமது முன்னோர்கள் பருப்பும் சோறும் கலந்து ஊட்டுவார்கள் அதில் விஞ்ஞான ரீதியான ஏற்புடமையும் உண்டு.

ஏனெனில் பருப்பில் இருக்கக்கூடிய சில புரதங்கள் சோற்றில் இருக்காது. அதேபோல் அரிசியில் இருக்கும் சிலபுரதங்கள் பருப்பில் இருக்காது. எனவே இரண்டையும் கலந்து சாப்பிடும் போது முழுமையான புரதங்கள் எமக்கு கிடைக்கக்கூடியதாக இருக்கும். ஆனால் துவரம்பருப்பு சமைக்கும் போது மிளகு, சீரகம் கட்டாயமாக சேர்க்க வேண்டும்.

ஏனெனில் அதிலுள்ள கெட்ட தன்மைகளை நீக்கி, நல்ல தன்மைகளைக் கொடுக்கும். தற்காலத்தில் நிறையபேர் Protein Powder ஆக விலை கொடுத்து வாங்கி பயன்படுத்துகிறீர்கள்.

இப் Powder ஆனது அதிகளவான அடர்த்தி (Density) கொண்டது. இது சிறுநீரகத்தை பாதிக்கலாம். எனவே இயற்கையான மலிவான புரத உணவுகளை எடுப்பது சிறந்தது.

புரதத்திற்காக முட்டை எடுக்கும் போது காய்கறிகள், மிளகு தூள், மஞ்சள் தூள் கலந்து சாப்பிடுவது ஆரோக்கியத்திற்கு சிறந்தது. இப்படி சாப்பிடும் போது குறைந்த கலோரி, அதிக புரதம் கொண்ட உணவாகும். ஆனால் ஒரு நாளைக்கு ஒரு முட்டைக்கு மேல் சாப்பிடக் கூடாது. ஆனால் முட்டையை பொரித்து எடுக்காமல், அவித்து பயன்படுத்த வேண்டும். இறுதியாக சைவ உணவுப் புரதம் எது வெனில் சோயா ஆகும்.

கிட்டத்தட்ட 100 கிராம் சோயாவில் 52 கிராம் புரதம் உண்டு. ஆய்வுகள் கூட சோயா என்புகளுக்கு சிறந்தது எனவும். புற்றுநோய் வராமல் தடுக்கக்கூடியது எனவும் கூறுகிறது. பசுப்பால் சேர்ந்த பால், தயிர் உணவுகளிலும் புரதச் சத்து எமக்கு கிடைக்கின்றது.

# இராசிபலன்

01.12.2025, கார்த்திகை 15, திங்கட்கிழமை
ஏகாதசி பிற்பகல் 2.43 மணிவரை

ரேவதி முன்னிரவு 7.56 மணிவரை
சுபநேரம் 12.14 -1.44 மணிவரை
இராகுகாலம் 7.44-9.14 மணிவரை
ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம்- பூரம், உத்தரம்.

வளவன்


மேஷம்

திடீர் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.


கடகம்

விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.


துலாம்

சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், செய்தொழில் உற்சாகம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், உடல்நலன் சீராகும்.


மகரம்

தொழிலில் ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், உள்ளம் மகிழும் சம்பவங்கள் இடம்பெறலாம், உற்சாகத்தோடு செயற்படும் நாள்.


ரிஷபம்

தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


சிம்மம்

மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி \ çÅ¥D, தொழில் ரீதியாக எடுத்த முயற்சியில் சிறு தடை தாமதம் என்பன இடம் பெறலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.


விருச்சிகம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.


கும்பம்

பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.


மிதுனம்

மனநிறைவு கூடும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும் எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.


கன்னி

கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, குடும்பத்தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், போசன சுகமுண்டு.


தனுசு

கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், சென்ற இடங்களில் செல்வாக்கு அதிகரிக்கும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், சுப செய்திகள் வந்து சேரலாம்.


மீனம்

கனிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், வழிபாடு ஆனந்தம் தரும், பெரிய மனிதர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

தன்னடக்கத்தின் பாதையே வாழ்க்கை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 820





"சுவாமி! நான் யாரைப் பற்றியும் அவர்களுக்குப் பின்னால் பேசும் வழக்கமில்லை. சற்று முன் தாங்களே அபாயத்தைப் பற்றிப் பேசினீர்கள். தங்கள் உள்ளத்தில் அவ்விதம் தோன்றுவதாகச் சொன்னீர்கள். தங்கள் உள்ளத்தில் தோன்றுவது முற்றிலும் உண்மை. சோழர் குலத்துக்கு அபாயம் நெருங்கிக் கொண்டுதானிருக்கிறது. அது இரண்டு வழியாக வருகிறது. இந்த நாட்டில் இப்போது இரண்டுவிதமான சதிகள் நடைபெற்று வருகின்றன. பழுவேட்டரையர்களும், சம்புவரையர்களும்"

"முதன்மந்திரி அநிருத்தரே! நிறுத்துங்கள் பழுவூர் வம்சத்தார் நூறு ஆண்டு காலமாகச் சோழ குலத்துக்குத் தொண்டு செய்து வந்தவர்கள். பெரிய பழுவேட்டரையர் இருபத்துநாலு போர் முனையிலும் போரிட்டுத் தமது மேனியில் அறுபத்துநாலு புண்களைச் சுமந்து கொண்டிருக்கிறார். அப்படிப்பட்டவர் இன்று சோழ குலத்துக்கு எதிராகச் சதி செய்கிறார் என்று சொல்வதைக் காட்டிலும், சூரியன் இருட்டாகி விட்டது என்றும், கடல் நீரில் தீப்பிடித்துக் கொண்டுவிட்டது என்றும் சொல்லுவதை நம்பலாம்.."

"சக்கரவர்த்தி! சூரியனையும் கிரஹணம் பிடிக்கிறது. கடல் நீரில் வடவாமுகாக்கினி கொழுந்துவிட்டெரிகிறது. ஆனால் அதைப் பற்றி நான் சொல்ல வரவில்லை. பழுவேட்டரையர்கள் சோழ குலத்துக்கு எதிராக சதி செய்வதாக நான் கூறவே இல்லை. மதுராந்தகருக்குப் பட்டம் கட்டுவதற்காக அவர்கள் மிகுந்த பிரயத்தனம் செய்து வருகிறார்கள்.."

"மகா சிவபக்தராகிய கண்டராதித்தருடைய புதல்வருக்குப் பட்டம் கட்ட எண்ணுவதில் என்ன தவறு? சிம்மாசன உரிமை நியாயமாக மதுராந்தகனுக்குத் தானே உரியது?" என்றார் சக்கரவர்த்தி.

"நானும் அதையேதான் சொல்லுகிறேன் மேலும் தாங்களே மனமுவந்து மதுராந்தகத் தேவருக்குச் சோழர் குல்த்து மணிமகுடத்தை அளிக்கத் தீர்மானித்து விட்டீர்கள். அப்படியிருக்கும்போது பழுவேட்டரையர் மீது குற்றம் என்ன? தங்கள் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கவே அவர்கள் பிரயத்தனப்படுகிறார்கள்.."

"ஆகையினால் என்னுடைய நன்றியறிதலுக்கு மேலும் அவர்கள் பாத்திரமாகியிருக்கிறார்கள்."

"ஆனால், சக்கரவர்த்தி, தங்களுடைய சம்மதம் பெறாத சில காரியங்களும் செய்கிறார்கள். சோழ ராஜ்யத்தை இரண்டாகப் பங்கு போட்டுக் காவேரிக்குத் தெற்கேயுள்ளதை மதுராந்தகத் தேவருக்கும் வடக்கே உள்ள பகுதியைக் கரிகாலருக்கும் கொடுத்து விடுவதென்று யோசனை செய்து வருகிறார்கள். சம்புவரையர் மாளிகையில் இன்றைய தினம் அந்தப் பேச்சு நடந்து வருகிறது. சக்கரவர்த்தி! நூறு வருஷ காலமாகத் தங்கள் முன்னோர்கள் பாடுபட்டு விஸ்தரித்த ராஜ்யத்தை விஜயாலய சோழரும் ஆதித்த சோழரும் மகாபராந்தக சக்கரவர்த்தியும் ஈழம் முதல் கோதாவரி வரையில் நிலைநாட்டிய சோழ மகாராஜ்யத்தை இரண்டாகப் பிளந்து பங்கு போடுவது தங்களுக்குச் சம்மதமா?"

தொடரும்...



# சிறுவர் அரங்கம்

## செத்த எலியால் வியாபாரி ஆனான்



அவர்களுக்கு கொஞ்சம் கடலையும், ஒரு குவளை தண்ணீரும் கொடுத்தான்.

அவர்கள் மகிழ்ச்சியோடு, ஆளுக்கு இரண்டு விறகுக் கட்டைகளைப் கொடுத்து விட்டுச் சென்றனர்.

கிடைத்த விறகுக் கட்டைகளைச் சுமந்து சென்று, விறகுத் தொட்டியில் விற்றுப் பணம் பெற்றுச் சென்றான்.

இளைஞன் மீண்டும் அந்தப் பணத்துக்குக் கடலை வாங்கி, வறுத்து, அதையே தொடர்ந்து செய்து கொண்டிருந்தான்.

விறகு வெட்டிகள் பலரும் அவனுக்கு வாடிக்கையாளர்கள் ஆனார்கள்.

தினமும் அவனுக்குக் கிடைத்த விறகுகளில் ஒரு பகுதியை விற்று, மீதியை வீட்டில் சேமித்து வைக்கலானான். விறகுகள் வீட்டில் மலைபோல் குவிந்தன.

திடீரென்று அந்த ஊரில் அடைமழை பெய்யத் தொடங்கியது. விறகுத் தொட்டிகளில் இருந்த விறகுகள் எல்லாம் தீர்ந்தன. விறகுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. விலையும் அதிகமாகியது.

இளைஞன் தன் வீட்டில் சேமித்து வைத்திருந்த விறகுகள் அனைத்தையும் நல்ல நல்ல விலைக்கு விற்றதால், பணம் நிறையக் கிடைத்தது.

அந்தத் தொகையை மூலதனமாகக் கொண்டு, சிறிய வியாபாரம் ஒன்று தொடங்கினான் பிறகு, அது வளர்ந்து பெருகி, பெரிய வியாபாரி ஆனான்.

ஒரு நாள், யாரால் இந்த அளவுக்கு முன்னேறி, பணம் சம்பாதித்தோம் என்பதை நினைத்துப் பார்த்தான் இளைஞன். பிறகு, வெள்ளியினால் ஒரு எலி செய்து, அதை அந்தச் செட்டியாரிடம் கொண்டு போய்க் கொடுத்து வணங்கி நின்றான் இளைஞன்.

அதைப் பார்த்ததும் செட்டியாருக்கு ஒன்றும் புரியவில்லை. இளைஞன், தான் முதன்முதலில் வந்து, செத்த எலியைக் கொண்டு சென்றது முதல் எல்லாவற்றையும் விவரமாகக் கூறினான்.

அவனுடைய ஊக்கத்தையும், உழைப்பையும், நாணயத்தையும் கண்டு செட்டியார் அவனைப் பாராட்டி மகிழ்ந்தார்.

அதன்பின், தன்னுடைய ஒரே மகளை, அந்த இளைஞனுக்குத் திருமணம் செய்து கொடுத்தார் செட்டியார்.

ஊக்கமும், உழைப்பும் தன்னம்பிக்கையும் இருந்தால், எப்படியும் முன்னேறலாம்.

முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் மிகப்பெரிய அறிவாளி அல்ல, ஆனால் எனது சவால்களுடன் சற்று நீண்ட நேரம் போராடக்கூடிய வன்.
– ஆல்பேர்ட் ஐன்ஸ்டீன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மலையகத்தின் பெருந்துயராய் நீண்டு செல்லும் மண்சரிவு

இலங்கையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் நாட்டைப் புரட்டிப் போட்டுள்ளது.

இலங்கை வரலாற்றில் குறித்துரைக்கப்படுகின்ற அளவில் குறித்த வெள்ளப் பேரிடர் அமைந்துள்ளதெனலாம்.

ஆம், நாடு முழுமையிலும் கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் சூறாவளிக் காற்றினால் ஏற்பட்ட இழப்புகள் மனித மொழிகளில் கூறிவிட முடியாதவை.

ஒருபுறம் குளங்கள் பெருகி அணைகளை உடைக்க – ஆறுகள் பாய்ந்தோடி வீடுகள், வீதிகள், புகையிரதப் பாதைகள், பாலங்கள் என்பவற்றைச் சங்காரம் செய்ய – மின்கம்பங்கள் முறிந்துவிழ – பாரிய மரங்கள் பாறுண்டு கிடக்க, இலங்கைத் திருநாட்டின் இயல்புநிலை முழுமையாகப் பாதிக்கப்படலாயிற்று.

அந்தோ! கொடுமை. மலையகத்தின் பெருந்துயரமாய் அமைந்த மண்சரிவு இம்முறையும் காலனுக்கு உதவுகின்ற தன்வேலையைச் செய்து முடித்துள்ளது.

ஆம், மலையகத்து மண்ணில் வாழ்ந்த குடும்பங்கள் ஒரு கணத்தில் மண்ணில் புதையுண்டு போவதை எந்தவகையிலும் ஜீரணிக்க முடியாது.

மண்சரிவு ஏற்படுகின்ற இடங்களில் வீடுகளைக் கட்டுகின்ற அவல நிலையிலேயே இன்னமும் மலையக மக்கள் உள்ளனர்.

உண்மை. நிலம் இல்லை, ஆன பொருளாதாரம் இல்லை. அன்றாட கூலிக்கு மாரடித்துக் கிடைக்கின்ற சிறிய ஊதியத்தில் சீவியம் நடத்துகின்ற மலையக மக்கள் வேறு எங்கு தான் செல்ல முடியும்.

ஆம், அந்த மக்களின் ஒரே நம்பிக்கை குன்றுகள் தமக்கு குறைவைக்காதென்பது தான்.

என்ன செய்வது. மாரிகாலத்து மழையும் சூறைக்காற்றும் மலையகத்தின் உயர்வு கண்டு பொறாமை கொண்டதுபோல், கொட்டி முழக்கி; மலையாய் வீற்றிருக்கும் மண்ணை மண்ணாக்கி தன் அழுக்காறைத் தீர்த்துக் கொள்கிறது.

வானிலை ஆராய்ச்சிகள், எச்சரிக்கைகள், எதிர்வுகூறல்கள் என முன்னறிவித்தல்கள் பலமாக இருந்தும் மண்சரிவில் அகப்பட்டு குடும்பம் குடும்பமாய் உயிரிழந்துபோவதென்பதை நினைக்கும் போதுதான் இதயம் கருகிப் போகிறது.

கடவுளே! மண்சரிவுக்கு ஒரு முடிவுதான் இல்லையா? மண்சரிவு நடந்து போனாலும் பரவாயில்லை. அருமந்த மனித உயிர்கள் காவு கொள்ளப்படுவதுதான் கொடுமையிலும் கொடுமை.

மலையகத்தில் எத்தனையோ தடவைகள் மண்சரிவு ஏற்பட்டு, பிணக்குவியல்கள் அள்ளப்பட்டிருந்தும் இன்னமும் மண்சரிவில் இருந்து மக்களைப் பாதுகாக்க முடியவில்லை எனும்போதுதான் இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் – அரசியல் தரப்புகள் எந்தளவுதூரம் அசமந்தமாக இருந்துள்ளனர் என்பது புலனாகிறது.

ஆக, மலையகத்தின் பெருந்துயராய் அமைந்த மண்சரிவில் இருந்து மக்களைப் பாதுகாக்கின்ற விசேட திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இல்லையேல் மலையகத்தின் பெருந்துயராக இருக்கக்கூடிய மண்சரிவு, இந்த நாட்டில் ஆண்டு தோறும் பேரனர்த்தமாகும் துர்ப்பாக்கிய நிலை தொடரவே செய்யும்.

# வெள்ள அனர்த்தம் காரணமாக தொற்று நோய்கள் ஏற்படலாம்

## மருத்துவர் சத்தியமூர்த்தி எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தத்தின் காரணமாக தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது.

எனவே பொதுமக்கள் இதுகுறித்து விளிப்புடன் செயற்பட வேண்டும் என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

அண்மைய நாட்களில் பெய்த மழை காரணமாக பல்வேறு சிக்கலான நிலைகள் உருவாகியுள்ளன. குறிப்பாக தொற்றுநோய்கள் ஏற்படும் அபாயம் காணப்படுகிறது.

வாழ்விடங்களில்மழை நீர் புகுந்ததன் காரணமாக லெப்டோஸ்பைரோசிஸ் நோய் ஏற்படும் வாய்ப்புள்ளது. மேலும் தோல் வியாதிகள், சுவாசத் தொற்றுகள், வயிற்றோட்டம் போன்ற நோய்களும் ஏற்படலாம்.

ஆகவே கீழ்வரும் நடைமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

அசுத்தமான நீரில் நடைபயணம் செய்தால் அல்லது அந்தப் பகுதிகளில் சென்று வந்தால் சவர்க்காரம் பயன்படுத்தி கை, கால் உள்ளிட்ட உடற்பகுதிகளை நன்றாகக் கழுவ வேண்டும்.

சுத்தமான குடிநீரைப் பருக வேண்டும். கொதிக்க வைத்த நீரைப் பருகுவது சிறந்தது.

வாழ்விடங்களை எப்போதும் தூய்மையாகப் பேண வேண்டும். சுகாதாரமற்ற உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.

உடல் நலத்தில் கவனம் செலுத்தி, நோய்கள் ஏற்படும் அபாயத்தை குறைக்க வேண்டியது அவசியம்.

வைத்திய சிகிச்சை தேவைப்படும் போது தாமதமின்றி வைத்திய சாலைக்கு செல்ல வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (ந-7)

## எரிவாயு சிலிண்டருக்கு தட்டுப்பாடு இல்லை

(கொழும்பு)

வீட்டுப் பாவனைக்கான எரிவாயு சிலிண்டர்களின் கையிருப்பு போதுமான அளவு இருப்பதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன் எரிவாயு நிரப்பும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாகவும் அனர்த்தம் காரணமாக செல்ல முடியாத பகுதிகளுக்கு எரிவாயு விநியோகத்தை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந் நிறுவனம் கூறியுள்ளது.

அத்துடன் எரிவாயுவைப் பெறுவது குறித்த தேவையான தகவல்களை 1311 என்ற துரித இலக்கத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும் என லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது. (ந-7)

## கொழும்பு - கண்டி பிரதான வீதியில் தாழிறக்கம்

கண்டி - கொழும்பு பிரதான வீதியில் யக்கல மற்றும் திஹாரியவிற்கு இடையில் ஆயுர்வேத மருத்துவமனைக்கு அருகிலுள்ள பாலத்தின் நடுப்பகுதி தாழிறங்கியுள்ளது.

இதன் காரணமாக யக்கல பகுதியிலிருந்து கண்டி - கொழும்பு பிரதான வீதி நேற்று காலை முதல் மூடப்பட்டுள்ளது.

இதற்கான மாற்றுப் பாதையைப் பொலிஸார் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இதன்படி யக்கல பகுதியிலிருந்து தெற்கு நோக்கித் திரும்பி நெல்லிகஹமுல வழியாக திஹாரியவிற்குள் நுழைந்து கொழும்பு - கண்டி பிரதான வீதிக்கு நுழைய முடியும் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.(ந-7)

## மூன்று நாட்களுக்குள் நீர் விநியோக சேவை வழமைக்குத் திரும்பும்

(கொழும்பு)

நாட்டைப் பாதித்த சீரற்ற காலநிலை காரணமாகப் பல மாவட்டங்களில் தடைப்பட்டுள்ள நீர் விநியோகத்தை மூன்று நாட்களுக்குள் வழமைக்குக் கொண்டு வரத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தலைவர், பொறியியாளர் ஏ.எம்.பி.சி.டி. பண்டார தெரிவித்துள்ளார்.

முப்படைப் பாதுகாப்புத் தலைமையகத்தில் நேற்று (30) இடம்பெற்ற சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

ஜனாதிபதியின் அறிவுறுத்தலின்படி நீர் விநியோகத்தை உடனடியாக வழங்குவதற்காக முப்படைகள், நீர்ப்பாசனத் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மின்சார சபையிடமிருந்து உதவி பெறப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையால் கண்டி மாவட்டத்திலுள்ள சுத்திகரிப்பு மற்றும் உந்து நிலையங்கள் பெருமளவில் சேதமடைந்துள்ளன.

தற்போது திஸ்ஸமஹாராம, கதிர்காமம், பதுளை, பண்டாரவளை, வெலிமடை, அம்பாறை ஆகிய பகுதிகளிலும் வடமத்திய, வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலும் நீர் விநியோகம் தடைபட்டுள்ளது.

எனினும் காலி, அநுராதபுரம், மட்டக்களப்பு மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் நீர் விநியோகம் 100 சதவீதமாக மீளமைக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் உள்ள அம்பத்தலை, லபுகம போன்ற முக்கிய நீர் மூலங்களுக்குச் சேதமில்லை எனவும் களனி கங்கையின் வெள்ள அபாயம் தணிந்துள்ளது.

அத்துடன் தடைப்பட்டுள்ள பல பகுதிகளுக்கு தாங்கி ஊர்திகள் மூலம் நீர் வழங்கப்பட்டு வரும் நிலையில் அடுத்த மூன்று நாட்களுக்குள் 100 சதவீத நீர் விநியோகத்தை மீள வழங்க முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். (ந-7)

JSAC
டிஜிட்டல் வன்முறைகள் என்பது வெறும் மெய்நிகர் காயம் அல்ல. உண்மையான மனக்காயம் அதனை நாம் தவிர்ப்போம், கட்டுப்படுத்துவோம்.
16
2025

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2025
“ஒரு தேசமாக நிலைத்திருக்க , ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்.”
-தியோடர் ரூஸ்வெல்ற் (அமெரிக்காவின் 26 ஆவது ஜனாதிபதி)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பாராளுமன்றத்தில் பெண்களின் அரசியல்

## 13

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம், தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

1950 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 24 ஆம் திகதி அவர் ஆனந்த சாஸ்த்ராலயாவில் தனது பள்ளிப் பருவத்தில் இருந்து அறிந்த ஆசிரியரும் விரிவுரையாளருமான கோனார முதியன்சேலாகே பொடியப்புஹாமி ராஜரத்னவை (கே. எம். பி ராஜ ரத்தினா) மணந்தார்.

அவரது கணவர் 1952 பாராளுமன்றத் தேர்தலில் வெலிமடை வேட்பாளராக நின்றார், ஆனால் மூன்றாவதாக வந்த பிறகு தேர்ந்தெடுக்கப்படவில்லை. 1952 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தனது சொந்த தேர்தல் முகவராக இருந்த ராஜரத்ன தனது தேர்தல் செலவுகளை சமர்ப்பிக்காததற்காக பதுளை மாவட்ட நீதிமன்றம் 26 ஒகஸ்ட் 1955 அன்று அவருக்கு 100 ரூபா அபராதம் விதித்தது.

அவர் 1956 பாராளுமன்றத் தேர்தலில் வெலிமடைத் தொகுதியில் மஹாஜன எக்சத் பெரமுனா (MEP) வேட்பாளராக நின்று வெற்றி பெற்றார். 1956 ஆம் ஆண்டு ஒக்டோபர் 1 ஆம் திகதி நீதிமன்றம் 1956 ஆம் ஆண்டு வெலிமடை பாராளுமன்றத் தேர்தல் செல்லாது என்று தீர்ப்பளித்தது. ஏனெனில் ராஜரத்ன 1955 ஆம் ஆண்டு தண்டனையைத் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டு இருந்தார். இதனால் அவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்தார்.

1957 செப்ரெம்பர் 7 ஆம் திகதி நடைபெற்ற இடைத் தேர்தலில் குசுமா சுயேட்சையாகப் போட்டியிட்டார், அங்கு அவர் 14,069 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். மொத்த வாக்குகளில் 80% இற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

மார்ச் 1960 இல் நடந்த 4 வது பாராளுமன்றத் தேர்தலில் குசுமா வெலிமடை தொகுதியில் பிரதிநிதித்துவப்படுத்துவதில் இருந்து விலகி, தனது கணவரை மீண்டும் தொகுதியில் போட்டியிட அனுமதித்தார். குசுமா தேசிய விடுதலை முன்னணி (ஜாதிக விமுக்தி பெரமுன) வேட்பாளராக புதிதாக உருவாக்கப்பட்ட ஊவா பரணகமவில் போட்டியிட்டு 4,662 வாக்குகளை (மொத்த வாக்குகளில் 40%) பெற்று வெற்றி பெற்றார். ஜூலை 1960 இல் நடந்த பாராளுமன்றத் தேர்தலில், 6,473 வாக்குகளைப் (மொத்த வாக்குகளில் 56.88%) பெற்று, அதிகரித்த பெரும்பான்மையுடன் அவர் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டார்.

குசுமா 1965 பாராளுமன்றத் தேர்தல்களிலும் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அவரது கணவர் வெலிமடை தொகுதிக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட முயற்சியில் தோல்வியடைந்தார். மூன்றாவது டட்லி சேனநாயக்க அமைச்சரவையில் (1965) உள்நாட்டலுவல்கள் அமைச்சருக்கான பாராளுமன்ற செயலாளராக குசாமா நியமிக்கப்பட்டார், ஆனால் நிர்வாகத்தில் தமிழை உத்தியோகபூர்வமாக பயன்படுத்துவதற்கு வசதியாக புதிய சட்டங்களை அறிமுகப்படுத்த அரசாங்கம் எடுத்த முடிவை எதிர்த்து 1966 இல் பதவியை ராஜினாமா செய்தார்.

### குசுமா ராஜரத்னவின் கணவர் கே. எம். பி. ராஜரத்ன பற்றி....

கே. எம். பி ராஜரத்தினா ஒரு தீவிர சிங்கள பௌத்த தேசியவாதியாகவும், தமிழின எதிர்ப்பாளராகவும் அடையாளப்படுத்தப்பட்டார். இவர் எஃப். ஆர். ஜெயசூரியா என்பருடன் இணைந்து சிங்களத்தைத் தனியான ஆட்சி மொழியாக்குவதற்குப் பரப்புரை செய்த சிங்கள மொழி முன்னணி என்ற அமைப்புடன் செயலாற்றி வந்தார். ராஜரத்தினா 1952 பாராளுமன்றத் தேர்தலில் வெலிமடைத் தொகுதியில் போட்டியிட்டு தோற்றார். 1956 தேர்தலில் மகாஜன எக்சத் பெரமுன சார்பில் வெலிமடைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று பாராளுமன்றம் சென்றார். தேர்தலில் வெற்றி பெற்றதை அடுத்து இவர் அஞ்சல், ஒலிபரப்பு, தகவல் துறை அமைச்சின் பாராளுமன்ற செயலாளராக நியமிக்கப்பட்டார். புதிய எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அரசு சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல்படுத்தத் தீர்மானித்தது. இதனால் தமிழர் வாழும் பகுதிகளில் கிளர்ச்சிகள் ஆரம்பித்தன. சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு ராஜரத்தினா முக்கிய தூண்டுகோலாக இருந்து செயற்பட்டார். ஆரம்பத்தில் இச்சட்ட முன்வரைவில் "நியாயமான தமிழ் மொழிப் பயன்பாடு" குறித்து பண்டாரநாயக்கா தயாரித்த 4 அம்சத் திட்டத்தை எதிர்த்து பாராளுமன்றக் கட்டடத்திற்கு முன்னால் 1957 ஜூன் 11 அன்று இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் எப். ஆர். ஜெயசூரியவுடன் இணைந்து ஜெயரத்தினாவும் சாகும் வரை உண்ணாநோன்புப் போராட்டத்தை நடத்தினர்.

1956 ஜூன் 5 இல் சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து சா. ஜே. வே. செல்வநாயகம் தலைமையில் தமிழ் செயற்பாட்டாளர்கள் காலிமுகத்திடலில் பாராளுமன்றத்திற்கு முன்னால் சத்திஆக்கிரகப் போராட்டத்தை நடத்தினர். ராஜரத்தினாவின் தலைமையிலான சிங்களக் குண்டர்கள் காவல்துறையினரின் முன்னிலையில் போராட்டக்காரர்களைத் தாக்கி, தமிழரசுக் கட்சித் தலைவர்கள் இ. மு. வி. நாகநாதன், வ. ந. நவரத்தினம் ஆகியோரைத் தூக்கி அருகில் இருந்த ஏரியில் போட்டனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி திருகோணமலையில் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்த பண்டாரநாயக்கா அனுமதிக்காத காரணத்தால், ராஜரத்தினா அரசில் இருந்து விலகினார்.

வெலிமடையில் இடம் பெற்ற 1956 தேர்தல் செல்லுபடியாகாதென 1956 ஒக்டோபர் 1 இல் நீதிமன்றம் தீர்ப்பளித்ததை அடுத்து, ராஜரத்தினா பாராளுமன்ற இருக்கையை இழந்தார். அதன் பின்னர் ராஜரத்தினா 1957 இல் தேசிய விடுதலை இயக்கம் (என்.எல்.எஃப்) என்ற தனிக்கட்சியை ஆரம்பித்தார். 1958 தமிழருக்கு-எதிரான கலவரங்களை அடுத்து இக்கட்சி தடை செய்யப்பட்டது. ராஜரத்தினா சிறீ ஜெயவர்தனபுர கோட்டையில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

ராஜரத்தினா 1960 மார்ச் தேர்தலில் வெலிமடை தொகுதியில் மீண்டும் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1960 ஜூலை தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றார். 1961 மே 25 இல் பாராளுமன்ற இருக்கையை இரண்டாம் தடவையாக இழந்தார். ஆனாலும், 1962 ஜூன் 28 இடைத்தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் பாரா மன்றம் சென்றார்.

1965 தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றார். தேர்தலின் பின்னர் இவரது என். எல். எஃப் கட்சி ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்தது. ஊவா-பரணகமை தொகுதியில் வெற்றி பெற்ற இவரது மனைவி குசுமா பாராளுமன்ற செயலாளராக நியமிக்கப்பட்டார். டட்லி - செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து குசுமா அரசில் விலகினார். ராசரத்தினா பின்னர் செனட்சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டு, செனட்சபை 1972 இல் கலைக்கப்படும் வரை அப்பதவியில் இருந்தார்.

ராஜரத்தினாவும் அவரது மனைவியும் பின்னர் அரசியலில் இருந்து விலகி வழக்கறிஞர்களாகப் பணியாற்றினர். 2001 தேர்தலில் சிகல உறுமய கட்சியின் தேசியப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தார். ஆனாலும், அக்கட்சி தேர்தலில் எந்த தொகுதியிலும் வெல்ல முடியவில்லை. ராசரத்தினா 2011 ஜனவரியில் காலமானார்.

### 1956ஆம் ஆண்டுத் தேர்தலில் தோல்வி அடைந்த பெண்கள்

க்ளோடாக் ஜெயசூர்யா- அவிசாவளை க்ளோடாக் ஜெயசூர்யா ஒக்டோபர் 1953 இல் இலங்கையின் செனட்சபை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1956ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் மீண்டும் போட்டியிடுவதற்காக தனது செனட்டர் தனது பதவியை 1956 இல் ராஜினாமா செய்தார்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் பேரிடர்...

அத்துடன் 14 ஆயிரத்து 624 குடும்பங்களைச் சேர்ந்த 46 ஆயிரத்து 638 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையப் பிரதிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலவும் சீரற்ற காலநிலையால் இரு வீடுகள் முழுமையாகவும் 256 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. இருவர் காயமடைந்துள்ளனர்.

அதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது 57 இடைத்தங்கல் முகாம் அமைக்கப்பட்டு 5ஆயிரத்து 323 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார். (ந-7,33)

## மக்களின் குறை...

கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி அனர்த்த முகாமைத்துவ மையத்தினால் **070 411 7117, 078 411 7117, 077 411 7117** ஆகிய வட்ஸ்அப் இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மக்கள், இந்த இலக்கங்கள் ஊடாகத் தமது அவசர நிலைமைகள் மற்றும் தேவைகள் குறித்த தகவல்களை அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் தொடர்புகொண்டு வழங்குமாறு கோரப்பட்டுள்ளனர். (ந-7)

## கடற்படை...

சிப்பாய்கள் காணாமல்போயுள்ளதாகவும் அவர்களை மீட்கும் பணிகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு சுண்டிக்குளம் களப்பு பகுதியில் முகத்துவாரத்தை அகலப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த 5 கடற்படைச் சிப்பாய்களே இவ்வாறு காணாமல் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## கடற்றொழி...

முன்தினம் சனிக்கிழமை சிறுதொழிலுக்காகக் கடலுக்குச் சென்ற நிலையில் காணாமல் போயிருந்தார்.

இந்நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அவர் கடற்கரையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள நிலையில், வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ந-7,33,104)

## கல்வி நடவடிக்...

இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் மற்றும் அதிகாரிகளுடன் அனைத்துப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

இக்கலந்துரையாடலில் பல்கலைக்கழகங்களில் அனர்த்த முகாமைத்துவக் குழுக்களை அமைத்து பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆற்றுப்படுத்தல் மற்றும் நிவாரண ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும், மாணவர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பங்களில் ஏற்பட்ட இழப்புகளை அறிந்து கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருந்த பட்டப்பின் கற்கைகளுக்கான பட்டமளிப்பு விழா, சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் ஆய்வு மாநாடு, பொறியியல் கண்காட்சி என்பன பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## பட்டப்பகலில்...

யில் இளைஞர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்றைய தினம் (30) பட்டப்பகலில் மக்கள் நடமாட்டம் நிறைந்த இடத்தில் இப்பயங்கரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கொக்குவிலைச் சேர்ந்த இளைஞனே இவ்வாறு வெட்டிக் கொலை செய்யப்பட்டவராவார்.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது,

கொல்லப்பட்ட இளைஞர் வழக்கு விசாரணையின் பொருட்டு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்பமிட வேண்டியிருந்தது.

நேற்றைய தினம் நண்பர் ஒருவருடன் மோட்டார் சைக்கிளில் சென்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்பமிட்டுவிட்டு திரும்பும்போது, இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நான்கு பேர் பிரஸ்தாப இளைஞனைத் துரத்தித் துரத்தி நடுவீதியில் வைத்து வெட்டிச் சரித்தனர்.

இதன்போது கொல்லப்பட்டவரின் கணுக்கால் துண்டிக்கப்பட்டது.

இரத்த வெள்ளத்தில் கிடந்தவரை அங்கிருந்தவர்கள் அம்புலன்ஸ் வண்டி மூலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர்.

எனினும் அவர் அங்கு உயிரிழந்தார். குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முடுக்கியுள்ளனர். (ந-7)

## 334 பேர்...

நிலையில் 370 பேர் காணாமல் போயுள்ளனர். அத்துடன் 309,607 குடும்பங்களைச் சேர்ந்த 1,118,929 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று 30ஆம் திகதி விடுத்துள்ள அறிக்கையின்படி,

பாதிக்கப்பட்ட மக்களுக்காக நாடு முழுவதும் 1,275 பாதுகாப்பு மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் 51ஆயிரத்து 228 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 80 ஆயிரத்து 499 பேர் தற்போது பாதுகாப்பாகத் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகள் மற்றும் தேடுதல் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

டித்வா சூறாவளி நாட்டிலிருந்து நீங்கிய போதும் அதன் தாக்கமும் அதனால் ஏற்பட்ட உயிரிழப்புகளும் அதிகரித்த வண்ணம் உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-7)

## பேருந்தில்...

வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பேருந்து அநுராதபுரம் புத்தளம் வீதியில் கலா ஓயா பகுதியில் வெள்ளத்தில் சிக்கியது. அதன்போது பேருந்தினுள் சுமார் 60 பேர் வரையில் பயணித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

முதல் கட்டமாக பேருந்தில் சிக்கியவர்களை அருகில் இருந்த வீடொன்றின் கூரை மீது ஏற்றி பின்னர் கடற்படையினரின் உதவியுடன் அவர்கள் படகுகளில் ஏற்றப்பட்டு இரு நாட்கள் கடுமையான போராட்டத்தின் மத்தியில் மீட்கப்பட்டனர்.

இந்நிலையில் குறித்த பேருந்தில் பயணித்த இளைஞன் ஒருவர் காணாமல் போயுள்ளதாக உறவினர்கள் நொச்சியாகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தனியார் நிதி நிறுவனம் ஒன்றில் கடமையாற்றும் தணிகாசலம் பத்மநிகேதன் (வயது-36) என்ற இளைஞனே காணாமல் போயுள்ளார்.

பேருந்தின் மேற்கூரையில் அமர்ந்திருப்பவர்கள் தொடர்பில் வெளியான காணொளி ஒன்றில் பத்மநிகேதன் காணப்படுகிறார்.

அதேவேளை வீட்டின் கூரையில் இருந்த வேளை கூரையின் ஒரு பகுதி உடைந்து விழுந்ததாகவும், அதன் போது சிலர் வெள்ளத்தில் விழுந்த நிலையில், அங்கிருந்தவர்கள் அவர்களை மீட்டிருந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-7,33)

## மீட்புப் பணியில்...

விமானப்படைக்குச் சொந்தமான பெல் 212 ரக உலங்கு வானூர்தியொன்றே விபத்துக்குள்ளாகியுள்ளது.

உலங்குவானூர்தியிலிருந்த ஐந்து பேரும் மீட்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக மாரவில ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையிலேயே விமானி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். அவசரமாக தரையிறக்க முற்பட்டபோதே, குறித்த உலங்கு வானூர்தி விபத்துக்குள்ளானதாக விமானப்படை தெரிவித்துள்ளது. (ந-7)

## நம் நாடு...

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஆற்றிய அந்த உருக்கமான உரையில்,

ஒரு நாடென்ற வகையில் நாம் வரலாற்றில் மிகப்பெரிய மற்றும் மிகவும் சவாலான இயற்கைப் பேரழிவிற்கு முகங்கொடுத்துள்ளோம் என்பதை நாம் அறிவோம். இந்த நாட்டின் வரலாற்றில் மிகவும் சவாலான மீட்பு நடவடிக்கையை நாம் ஆரம்பித்துள்ளோம்.

முழு நாடும் பேரழிவிற்கு உட்படுத்தப்பட்ட முதல் அனுபவம் இது. நாலா பக்கங்களிலிருந்தும் முழு நாடும் நீரில் மூழ்கிப் பேரழிவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இது மிகவும் கடினமான ஒரு செயற்பாடாகும். இதனை நாம் வெற்றிகொள்ள வேண்டும்.

உயிர்களை அந்தக் குடும்பங்களுக்குத் திரும்பக் கொண்டு வர முடியாவிட்டாலும், ஏனைய அனைத்தையும் வழங்க நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். அதேபோன்று காணாமல் போனவர்கள் அனைவரும் உயிருடன் இருக்கிறார்கள் என்றும் நாங்கள் நம்புகிறோம். இந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பலருடைய துன்பத்தைத் தணிக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு பக்கபலமாக இருப்பதற்காக முன்வந்த அனைவரையும் நாம் அன்புடன் அரவணைக்கிறோம்.

சில சுற்றறிக்கைகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் தடைகளை ஏற்படுத்தியுள்ளன. அந்த சுற்றறிக்கைகள் அனைத்தையும் நாங்கள் மாற்றியமைத்து, அவர்கள் எங்கு இடம்பெயர்ந்துள்ளனர் அல்லது எங்கு வசிக்கிறார்கள் என்பதைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் அரசாங்க நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கில் ஒரு திட்டத்தைத் தயாரித்துள்ளோம்.

சில சுற்றறிக்கைகள் அதிகாரிகளுக்குத் தேவைக்கேற்ப பணத்தைப் பயன்படுத்துவதற்குத் தடைகளை ஏற்படுத்தியுள்ளன. அந்தச் சுற்றறிக்கைகளை நாங்கள் மாற்றியுள்ளோம். ஒரு பிரதேச செயலாளருக்கு 500 இலட்சம் ரூபா வரை செலவிட அனுமதி அளித்துள்ளோம்.

மேலும், கடந்த வரவு செலவுத் திட்டத்தில் நிறைவேற்றப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் 3,000 கோடி ரூபாய் எங்களிடம் உள்ளது. அதை நாங்கள் பாராளுமன்றத்தின் அனுமதி இல்லாமல் செலவிட முடியும். அதனை இந்தச் செயற்பாட்டிற்காக ஒதுக்கியுள்ளோம். மாவட்ட செயலாளர்களுக்கு எவ்வளவு பணம் தேவையோ அதையெல்லாம் வழங்கத் தேவையான ஏற்பாடுகளைச் செய்துள்ளோம்.

2025 வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி போதுமானதாக இல்லாவிட்டால், குறைநிதிப்பீட்டின் ஊடாக மேலும் நிதியை வழங்கலாம். வழங்கியுள்ள நிதியின் மூலம் இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு, சுகாதார உதவிகளை வழங்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.

இந்த அனர்த்த சூழ்நிலையை முகாமைத்துவம் செய்து , விரைவான மற்றும் திறமையான மீள்கட்டமைப்புக்குத் தேவையான சட்டப் பாதுகாப்பு மற்றும் வளங்களை வழங்க அவசர காலநிலையை அறிவித்துள்ளோம்.

இந்த அனர்த்தத்தை முகாமைத்துவம் செய்வதற்கும், நமது நாட்டை செழிப்புடன் கட்டியெழுப்புவதற்காக அன்றி வேறு எந்த அடக்குமுறை நடவடிக்கைக்கும் இந்த அவசரகால நிலையைப் பயன்படுத்தமாட்டோம் என்பதை இந்த நாட்டின் பிரஜைகளுக்கு உறுதியளிக்க விரும்புகிறேன்.

ஒன்றாக இணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவோம். குறிப்பாக இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதில் நான் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் பணியாற்றி வருகிறேன். நமது நாட்டின் பிரஜைகள் தொடர்பில் முழுமையான நம்பிக்கை எனக்குள்ளது. நமது நாட்டின் முப்படைகள், பொலிஸார் மற்றும் நமது நாட்டின் அரச சேவை மீது எனக்கு நம்பிக்கை உள்ளது.

குறுகிய வேறுபாடுகள் இல்லாமல் இந்த கூட்டு முயற்சியில் சேர அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறோம்.

எந்த இருளிலும் ஒளி பிறக்கிறது என்று நாம் நம்புகிறோம். இந்த இருண்ட நாட்கள் கடந்து போகும் என்றும் நாங்கள் நம்புகிறோம். எனவே, நாம் ஒன்றாக எழுச்சி பெறுவோம். இந்த கண்ணீர் விடும் இந்த அழகிய தேசத்தை குணப்படுத்துவோம். சுபீட்சமான நாட்டை உருவாக்குவோம் என்றார். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலையால் ஸ்தம்பித்தது மன்னார்

## நிர்க்கதியான நிலையில் மக்கள்
## 79 ஆயிரத்து 946 பேர் பாதிப்பு
## மீட்புப் பணிக்கு வானிலை முட்டுக்கட்டை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக ஏற்பட்ட சீரற்ற காலநிலையால் மன்னார் மாவட்டத்தில் இதுவரை 24 ஆயிரத்து 313 குடும்பங்களைச் சேர்ந்த 79 ஆயிரத்து 946 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் நேற்று (30) மாலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக ஏற்பட்ட சீரற்ற காலநிலை படிப்படியாகக் குறைந்து இயல்பு நிலைக்கு மாறி வருகிறது. இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 24 ஆயிரத்து 313 குடும்பங்களைச் சேர்ந்த 79 ஆயிரத்து 946 நபர்கள் குறித்த அசாதாரண காலநிலையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 87 முகாம்களில் 11 ஆயிரத்து 230 குடும்பங்களைச் சேர்ந்த 35 ஆயிரத்து 505 நபர்கள் தங்கள் வைக்கப்பட்டுள்ளனர். தற்போது மன்னார் மாவட்டத்தில் இயல்பான வானிலை காணப்பட்டாலும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் இன்னமும் தேங்கியுள்ளது.

மன்னார் மாவட்டத்தை இணைக்கும் இரண்டு வீதிகளும் துண்டிக்கப்பட்டு ஏனைய மாவட்டங்களுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளது.

மன்னார்- யாழ் பிரதான வீதி(ஏ-32) மற்றும் மன்னார் - மதவாச்சி பிரதான வீதி ஆகிய இரு வீதிகளும் தற்போது பயணம் செய்ய முடியாத நிலையில் வெள்ள நீர் தேங்கி நிற்கிறது. மாவட்டத்திலுள்ள அதிகளவான குளங்கள் பெருக்கெடுத்துள்ளதன் காரணமாக மல்வத்து ஓயா, பாலியாறு, பறங்கியாறு போன்ற ஆறுகளில் இருந்து அதிகளவில் நீர் பெருக்கெடுக்கின்றமையினாலும் பல கிராமங்கள் மூழ்கிய நிலையில் தொடர்புகள் இன்றி காணப்படுகின்றன.

தனித்து விடப்பட்ட சுமார் 250 நபர்களை மீட்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தேக்கம் தொங்கு பாலம் பகுதியில் கடந்த இரு தினங்களாக தவித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் உலங்கு வானூர்தியின் உதவியுடன் மீட்கப் பட்டுள்ளனர்.

மேலும் கூராய் பகுதியிலுள்ள குளம் பெருக் கெடுத்ததன் காரணமாக 40 பேர் மரங்களிலும் உயர்ந்த கட்டடங்களிலும் தஞ்சமடைந்த நிலையில் நீர் மட்டம் குறைந்த நிலையில் அவர்கள் அப்பகுதியிலுள்ள மண் திட்டியில் தற்போது தஞ்சமடைந் துள்ளனர்.


எனினும் சீரற்ற காலநிலை காரணமாக அவர்களை மீட்கும் நடவடிக்கை தாமதித்துள்ளதும் அவர்களுக்கான உணவு வழங்கும் நடவடிக்கைகள் கடற் படையூடாக முன்னெடுக் கப்பட்டுள்ளன. ஏனைய பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கான உணவு மற்றும் மீட்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றார். (ந-7,285)


உடனடி வேலைவாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்
40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)
சம்பளம் 30,000/- 50,000/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
(C-4460)
V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3580/-
11-16 Kg 2610/-
21-22 Kg 2380/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery (C-4460)
UK 11Kg - 1420/- | France 11Kg - 2170/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2300/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4459)
076 825 7716 (ஆகாஸ்)


# மரண அறிவித்தல்



மலர்வு 29.03.1934 | உதிர்வு 29.11.2025

## பேரம்பலம் பாலசுப்பிரமணியம்
## (ஓய்வு நிலை ஆசிரியர்)

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் பாலசுப்பிரமணியம் அவர்கள் கடந்த (29.11.2025) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சித்தவைத்தியர் பேரம்பலம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - தையலம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பத்மாசனி அவர்களின் அன்புக் கணவரும் கலாநிதி அபிராமி (சிரேஷ்ட விரிவுரையாளர் - விலங்கியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்), யதுகுலன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), அபர்ணா ( ENT சத்திர சிகிச்சை நிபுணர் - மாவட்ட பொது வைத்தியசாலை, மன்னார்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவரூபன் (பிரதிப் பிரதம செயலாளர் - நிதி, வடக்கு மாகாணம்), சுகந்தினி (சிங்கப்பூர்), பகீரதன் (ஆசிரியர் - வவுனியா/ முஸ்லிம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆதித்யன், அனந்திதா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான பேராசிரியர் கனகசபாபதி, சிவலிங்கம், வாமதேவன், பத்மநாதன், புனிதவதி, ராஜராஜேஸ்வரி, மாலினி மற்றும் மகாதேவன், சாரதாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் மற்றும் தனபூசணி, காலஞ்சென்ற சாரதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2025) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிராமண உயரப்புல இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

"ஸ்ரீ பத்மம்"
இல.92, பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

(1749)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.